Free Circulation Germany- England
மணி: 73 - ஓசை: 319 சித்திரை. April. 2023

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

29TH years IN EUROPE
Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து பேசுவதற்கு 'அரகலய' அஞ்சுகிறதா?

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி



## உருவக் கேலி! எனும் வேலியை உடையுங்கள்

யேர்மனியில் தேர்க்காலம் 2023



## தேடி வரும் பூநாரைகளின் காலை வாரி விடாதீர்கள்!



## அனைவருக்கும் தமிழ் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்




# கத்தி கொடுத்து விறகு வாங்கினேன்

## டும்! டும்!! டும்!!!



இலங்கையில் தமிழர் பகுதிகளில், நுழைவாயில்கள், கலாச்சார மண்டபங்கள், சிவலிங்கம், நடராஜர் சிலைகள் என தமிழும் சைவ சமயம் சார்ந்த வற்றையும் நிறுவப்பட்டு வருகிறது. இதற்கு இலங்கை அரசு மௌனம் காத்து பசைக்கொடிகாட்டிவருகிறது. வெளி உலகிற்கும் இலங்கையின் ஜனநாயகம் சமத்துவம் பேணப்பட்டு தையும் அவை காட்டுவதாக அமைந்துள்ளது.

இதன் பின்னணியில் தமிழர் கலாசாரம் வழிபாடுகள் தென்மையானவற்றைக் குறிவைத்து, தகர்த்துக்கொண்டு புதியவற்றிற்கு ஆதரவு தருவது எமது இருப்பை, அதன் பழமையை அழித்து விட்டு அண்மைக்காலமாகத் தான் தமிழன் வாழ்ந்தான் என்னும் ஒரு வடிவத்தை தோற்றுவிக்கும் திட்டமாக அமைகின்றது. பாடப் புத்தங்களில் புதிய ஆலயங்கள், இவற்றை முன்னிலைப்படுத்தி பழமையானவற்றை விலக்கியும் வருவதாக அறிகின்றோம்.

குருந்தூர் மலை சிவனை அகற்றி பௌத்த விகாரை அமைப்பது, கிண்ணியா வெந்நீர் ஊற்று பௌத்தமயமாக்கியது. (இராவணேஸ்வரனுடன் தொடர்புடைய கன்னியா வெந்நீர் ஊற்றுக்களை பௌத்த மதத்தோடு இணைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதிகாசங்களில் திருகோணமலை கன்னியா ஏழு வெந்நீர் ஊற்றுகளை இராவண மன்னன் உருவாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், கன்னியா வெந்நீர் ஊற்றுக்களை பார்வையிட செல்வோருக்கு தொல்லியல் திணைக் களத்தால் தற்போது வழங்கப்படுகின்ற கட்டணச் சிட்டையில், தொல்லியல் சான்றுகளின் படி வெந்நீர் ஊற்று அநுராதபுர காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகவும்,இது பௌத்த வளாகத்தில் அமைந்துள்ளது எனவும் எழுதப் பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. கன்னியா வெந்நீர் ஊற்றுக்களானது அநுராதபுர காலத்துக்கும் முற்பட்ட இராவணேஸ்வர மன்னன் காலத்து பழமையானது.

சிவனொளிபாதமலை, திருகோணமலை கோணேசர் ஆலய ஆக்கிரமிப்பு, இப்படி பலவற்றை மறைமுகமாக செய்வதன் மூலம் எமது இருப்பின் பழமையை மறைத்து, புதிய வற்றை அமைக்க ஆதரவு கொடுத்து தமிழர்களின் நீண்ட வரலாற்றை குறுக்கிட திட்டமிட்டு செயல்படுகிறது அரசு.


28 ஆம் பக்கம் பார்க்க...



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 319



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து பேசுவதற்கு 'அரகலய' அஞ்சுகிறதா?




இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி


"என்கு வந்தால்
இரத்தம்!
உனக்கு வந்தால்
தக்காளி சட்னி"

"கோட்டா கோ ஹோம்" என்ற கோஷத்துடன் கடந்த வருடம் தென்னிலங்கையில் ஆரம்பமான போராட்டம், இப்போது ரணிலுக்கு எதிரான போராட்டமாக மாற்றமடைந்திருக்கின்றது. ஆனால், கடந்த வருடம் காணப்பட்ட வேகத்தை இப்போது காணமுடியவில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். இந்தப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்காக "அரகலய" என்று அழைக்கப்படும் கிளர்சியாளர்கள் மேற்கொண்ட மற்றொரு நகர்வும் தோல்வியடைந்திருக்கின்றது.

அடக்குமுறைக்கு எதிராக என்னதான் போராட்டங்களை தென்னிலங்கையின் அரகலய என்ற கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்டாலும், தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக அவர்கள் குரல் கொடுக்க மாட்டார்கள்என்பதுமீண்டும் ஒருதடவை உறுதிப் படுத்தப்பட்டிருக்கின்றது. சிங்களவர்கள் மத்தியில் தமக்குள்ள ஆதரவை இது பாதிக்கும் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சந்திப்பு இதனை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

கொழும்பு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களால் குழம்பிப் போயிருந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் பிரபலமான பெயர்தான் வசந்த முதலிகே. குறிப்பாக சிங்கள மாணவர்களின் தலைவராக இவர் தன்னை வரிந்து கொண்டமையால், சிங்கள இளைஞர்களின் மத்தியில் இவருக்குத்தனியான ஒரு செல்வாக்கு உள்ளது. அரசுக்கு எதிரான போராட்டத்தை தென்னிலங்கையில் முன்னெடுக்கும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர்தான் இந்த வசந்த முதலிகே. இவருக்குப் பின்னணியில் ஜே.வி.பி. இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இந்த வசந்த முதலிகே சில தினங்களுக்கு முன்னர் தனது சகாக்கள் சிலரையும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கான திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இந்த அவசர விஜயமும், யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகளும் பரபரப்புச்



செய்தியாக வெளிவந்திருந்தது. அரசுக்கு எதிரான போராட்டங்கள் தென்னிலங்கையில் இப்போது மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. வசந்த முதலிகே தலைமையிலான அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பு இந்தப் போராட்டங்களில் ஒரு முக்கிய பங்களிப்ப வழங்கிவருகின்றது. கோட்டாபயவுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்த அவர்கள் இப்போது ரணிலுக்கு எதிராக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள். ஆனால், கோட்டாபயவுக்கு எதிரான போராட்டத்தில் காணப்பட்ட உத்வேகத்தையும் அதில் கலந்துகொண்டவர்களின் தொகையையும் இப்போது காணமுடியவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று – போராட்டத்தை ஒடுக்குவதற்கு ரணில் கையாண்ட உபாயங்கள். தலைமை தாங்கிய பலர் கைதானமையும், அவர்கள் மீதான தடைகள் – வழக்குகள் என்பன பலரை இந்தப் போராட்டத்திலிருந்து ஒதுங்கிப்போகச் செய்துவிட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டம் அவர்களை பதம் பார்க்கிறது. இந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தாக்குப் பிடிக்கும் ஒருவராக இருப்பவர்தான் வசந்த முதலிகே.

போராட்டங்கள் பலவீனமடைய இரண்டாவது காரணம். கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்டது போல எரிபொருள், எரிவாயுவுக்கான வரிசைகள் இப்போது இல்லை. அவற்றுக்குத் தட்டுப்பாடும் இல்லை. அத்தியவசியப் பொருட்கள் இப்போது தாராளமாக இல்லாவிட்டாலும் – கிடைக்கின்றன. மின்வெட்டும் முடிவுக்கு வந்துவிட்டது. அதனால், இயல்புநிலை ஓரளவுக்கு ஓரளவுக்கு உருவாகிவிட்டது போன்ற ஒரு உணர்வு காணப்படுகின்றது. மக்கள் வீதிக்கு இறங்காமைக்கு இது இரண்டாவது காரணம்.

இந்த நிலையில் ரணிலுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் இரண்டு விடயங்களை தூக்கிப்பிடிக்கின்றார்கள்.

ஒன்று – உச்சத்துக்கு சென்றுள்ள விலைவாசி. முக்கியமாக மின்சாரக் கட்டணம் பல மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவது, அதிகரித்த வருமான வரி. இந்த இரண்டும் சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப் படுத்துவதற்காகச் செய்யப்பட்டவைதான். அதிகரித்த வருமான வரியால், தாம்

04 ஆம் பக்கம் பார்க்க...

பரபரப்பான சந்திப்பு இடம்பெற்றது. கொழும்பு போராட்டங்களின் பின்னணியிலிருந்து செயற்படும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் வநந்த முதலிகே ஆறு பேர் கொண்டு குழு ஒன்றுடன் அவசரம் அவசரமாக யாழ்ப்பாணம் வந்தார். வந்த வேகத்தில் யாழில் "முக்கியமான" பேச்சுக்களை நடத்திவிட்டு அந்தக் குழு வந்த வேகத்திலேயே கொழும்பு திரும்பியது.

கொழும்பில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வெடித்த போராட்டத்தின் பின்னர் சிங்கள




வெளிநாடுகளில் இருந்து விடுமுறைக்கு அல்லது ஒரு முறை கால் நனைக்க செல்பவர்கள் ஒரு சிலர் மட்டுமன்றி, அங்கு நிரந்தரமாக வாழ்பவர்கள் சிலரதும், மனநிலை குறித்த ஒரு செய்தி.

# எமக்கு ஏன் அந்த வம்பு!



வாகனம் வாடைக்கு எடுத்து ஓடுபவர்களும்,வாடகை வாகனத்தில் பயணிப்பவர்களும் சந்திக்கும் ஒரு செய்தி. தெருக்களில் வேகக் கட்டுப்பாடு வெளிநாடுகளைப்போல் தாய்மண்ணிலும் இன்று உண்டு. அந்த நாடுகளில் குறித்த வேகத்திற்கு மேலாக ஓடினால், எடுத்த படம் வீடு வரும். தண்டப்பணம் கட்டவேண்டும். சில நேரம் வேகத்தின் அடிப்படையில் சாரதிப்பத்திரம் குறித்த சிலமாதங்களுக்கோ அல்லது, நிரந்தரமாகவோ! பறிமுதலாகும். படம் எடுத்த இடத்திலேயே தண்டப்பணம் கட்டும் திட்டம் குறைவு. அப்படிக் கட்டினாலும் பற்றுச் சீட்டு வழங்குவார்கள்.

வட மாகாணத்தில் வீதியில் வேகக் கட்டுப்பாடு அதிகாரிகள் கமராவோடு நிற்பார்கள். குறித்த வேகத்தைவிட குறைவாகச் சென்றாலும் சில அதிகாரிகள் ஆள்பார்த்து மறிப்பார்கள். அன்றைய தினம் முதல் வேகமாகச் சென்ற ஒருவரது வேகத்தைக் கணித்த படத்தை உங்களது என்று காட்டுவார்கள்.

அது நீங்கள் இல்லை என்று உங்களுக்கும் தெரியும். அதில் உங்கள் வாகன இலக்கம் ஏன் உங்கள் படமே இருக்காது. இருந்தாலும். இனி அவர்களுடன் வாதாடி, இருக்கும் நான்கு நாள் விடுமுறையை இழக்காது, இழுபடாது ஏன் வம்பு என்று வெளிநாட்டில் இருந்து வந்தவர்களும், பணத்தை கட்டிவிட்டு... மன்னிக்கவும், சொருகி விட்டு, பயணம் செய்வார்கள். இப்படிக் கொடுப்பதும், வாங்குவதும் இப்போ ஒரு சிலர் மட்டுமே! நாளை இது, வீதிகளில் பொதுவிதியும் ஆகலாம். அது நீங்களாக, அல்லது நானாக, இருக்கலாம். ஏன் இந்த வம்பு என்று செல்வது அவர்களுக்கு நல்ல வருமானம் 'முன்பு எல்லாம் இப்படி என்றால் எப்படி இருக்கும்' என்று முணுமுணுப்பதுடன் சரி.

**நிலன்**

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து...

வழமையாகப் பெறும் வருமானத்தில் கணிசமான தொகையை மக்கள் இழக்கின்றார்கள். அதேவேளையில், செலவீனங்கள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றது. பொருட்கள் சேவைகளுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டமையும் இந்த செலவீன அதிகரிப்புக்கு காரணம்.

அரசின் ஒடுக்குமுறைகளில் இவர்களிடமுள்ள இரண்டாவது காரணம். போராட்டத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை கைகளில் எடுக்கின்றது. அரகலயவினருக்கு இதுதான் இதுதான் இப்போது பிரச்சினை. இதனால், பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்கு சிறுபான்மை மக்களையும் இணைக்காவிட்டால், சர்வதேச அரங்கில் அது கவனத்தைப் பெறாது, அவ்வாறான போராட்டம் பலமானதாகவும் இருக்காது என்ற நிலையில்தான் வசந்த முதலிகே தலைமையிலான குழவினர் அவசரமாக யாழ்ப்பாணம் வந்தார்கள்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் என வசந்த முதலிகே சொல்லப்பட்டாலும், யாழ்ப்பாணம்,



வசந்த முதலிகே தலைமையிலான குழவினர் யாழ் சென்ற போது...

மட்டக்கப்பு, வனியா பல்கலைக்கழக மாணவர்களை அவர்களால் அதற்குள் இணைக்க முடியவில்லை. அவர்களது போராட்டத்துக்கு அது பலவீனமாகவே இருந்தது. அதனால், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தையும் இதற்குள் இணைக்க வேண்டும் என்ற இலக்குடன்தான் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு பயணமானார்கள்.

பயங்கரவாத தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக 1979ல் உருவாகியது. மிகவும் மோசமானது என வர்ணிக்கப்படும் இதற்கு எதிராக தமிழர்கள் ஐ.நா. வரையில் சென்று குரல்கொடுத்திருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தினால் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள். இன்னும் பலர் சிறையில் வாடுகின்றார்கள்.

கடந்த 44 வருடங்களாக தமிழர், தமிழ் கட்சிகள், தமிழ் மாணவர்கள், தமிழ், இளைஞர்கள், தமிழ் தாய்மார்கள் இதற்கு எதிராகப் போராடிவருகின்றார்கள். இவ்வளவு காலதுத் அமைதியாக இருந்து விட்டு, இப்போது அந்த பயங்கரவாத தடைச் சட்டம் சநந்த முதலிகே போன்றவர்களையும் பதம் பார்க்கும் போதுதான், திடீரென யாழ்ப்பாணத்துக்கு வந்து "பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்க்க யாழ் பல்கலையும் இணைய வேண்டும்" என அவர்கள் கோரியிருக்கின்றார். இதற்கு "இணைகிறோம், ஆனால், எமது பிரச்சினைகளையும் உள்வாங்குங்கள்" என யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் தடாலடியாக பதிலளித்திருக்கின்றது. அதனைவிட, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் தொடர்பாகவும் வசந்த முதலிகே குழுவினருக்கு யாழ். முாணவர்கள் விளக்கியிருக்கின்றார்கள். அவை தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்று சொல்லிவிட்டுச் சென்ற வசந்த முதலிகே குழவினர் அது தொடர்பில் எதனையும் செய்ததாகத் தெரியவில்லை.

"என்கு வந்தால் இரத்தம்! உனக்கு வந்தால் தக்காளி சட்னி" என்பதுதான் அவர்களுடைய அணுகுமுறையாக இருக்கின்றது. இவ்வாறானவர்களுடன் தமிழர்களும் இணைந்து போரிட வேண்டும் எனக் கேட்பவர்களிடம் இதற்கு என்ன பதில் இருக்கின்றது.








அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# ஒரு சாதனை இல்லத் தலைவி



வைபவங்கள் என்றால் ஒரு பேச்சாளர் அவசியம் வேண்டும். திருமணம் என்றால் ஐயர், மந்திரங்கள் தேவையில்லை என்று கருதிய தமிழக அரசியல் கட்சிகளில் ஒன்று.

இரண்டு மாலை, ஒரு சொற்பொழிவாளருடன் திருமணங்களை நடத்திக் காட்டியது. நிறுவனங்களில் ஒரு சக ஊழியர் விலகுகிறார் என்றால் அவரைப் போற்றி சகாக்கள் உரையாற்றிய பின் அவருக்கு ஒரு அன்பளிப்பு வழங்குவது தமிழர்கள் மரபு. இங்கு பாட்டாளி மூலம் அப்படியாக ஊழியர் பிரிவுரையின் பின் அவருக்கு ஒரு அலாரம் கடிகாரம் ஒன்றும் வழங்கப்படல் இங்குள்ள மரபு. (அது ஏன் அலாரம் கடிகாரம்? இனி மேல் நீங்கள் காலையில் எழுந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை என்று காட்டுவதற்காக இருக்கலாம்.)

பிரிட்டனில் நடக்கும் இறுதிச் சடங்குகளில், உயிர் நீத்தவரின் நெருங்கிய குடும்பத்தினர், நண்பர்கள் (நெருங்கிய நண்பர்கள் இல்லாவிட்டால், பிரேமகாந்தனின் எல்லாளன் தமிழ்க் கடையில் முருங்கைக்காய் வாங்கும்போது பக்கத்தில் நின்ற ஒருவராக இருந்தாலும் பரவாயில்லை) எல்லோருமே அஞ்சலி உரை நிகழ்த்துவது பிரிட்டிஷ் தமிழர்களின் வழக்கமாக இருந்தது.

எது எவ்வாறாக இருந்தாலும், இறந்தவரின் மனைவியை உரை நிகழ்த்தும்படி யாருமே கேட்பதில்லை. ஏன்? அந்த மனைவி, தன் சராசரி 25 - 30 வருட மணவாழ்வில், இரவு நேரங்களில் பியரோ, வைனோ நண்பர்களுடன் பருகிவிட்டு வீடு திரும்பும் கணவன் தன் மீது சமஸ்கிருத மொழியில் நடத்திய 1000 பெயர்கள் கொண்ட லலிதா சஹஸ்ர நாமத்தை விபரிப்பதா அல்லது சற்று காரமான விஸ்கி போன்ற பானங்களை அருந்திவிட்டு தள்ளாடியபடி வரும் கணவன் வெறும் கைகளால் நடத்திய 'பொக்ஸிங்' விளையாட்டுகளை விபரிப்பதா இப்படி மனம் வேதனைப்பட்ட மனைவியை பேச யாருமே அழைப்பதில்லை. இல்லை அப்படித்தான் ஒரு மனைவி பேச வந்து தன் கணவரைப் பற்றி பேசாவிட்டால் தமிழர்கள் எவரும் அதனை ஏற்கத் தயாரில்லை.

இலங்கையிலிருந்து வந்த இந்த இலண்டன் தமிழர்கள், விமானத்தில் ரகசியமாக ஏற்றுக் கொண்டு வந்து இறக்கி வைத்துள்ள சீதன வெறி (ஒரு மூட்டை) ஜாதி துவேஷம் (இரண்டு மூட்டை), ஆணாதிக்க வெறி (10 மூட்டை), மட்டக்கிளப்பான், திருக்குணாமலையான் என்ற பிரதேச வாத வெறி (25 மூட்டை) இவற்றால் மிகக் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். தமக்கென ஒரு வட்டத்தைப் போட்டு அதற்குள் 'ஊர் வழக்கப்படி' நடக்க விரும்புகிறார்கள்.

ஆனால் இந்த வேலிகளை தகர்த்தெறியும் விதத்தில் இலண்டனில் தமிழ்ப் பெண்மணி ஒருவர் தன் கணவரின் இறுதிச் சடங்கின் போது மிகவும் உருக்கமான துணிச்சலாக பிரியாவிடை உரை நிகழ்த்தி மனதில் இடம்பிடித்தார். பிரிட்டனின் தனியார் சட்டங்களுக்கு அமைய உரை நிகழ்த்திய மனைவியின் பெயரும், அமரத்துவம் அடைந்த கணவரின் விபரங்களும் தவிர்க்கப்பட்டுள்ளன.

நான் திருமதி உங்கள் எல்லோருக்கும் அவரை தெரிந்திருக்கும் ஒரு நண்பராக, உறவினராக, சக ஊழியராக அவரை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் ஒரு மனைவியாக நான் 7 வருடங்கள் அவருடன் வாழ்ந்திருக்கிறேன். ஒரு கணவன் தன் மனைவியை எவ்வளவு கண்ணியமாக நடத்த வேண்டும் என்பதை ஆண்கள் என் கணவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். என் 7 வருடகால மண வாழ்வில் அவர் என்னைத் திட்டியதோ அடித்ததோ இல்லை. ஒரு குறையும் சொன்னதும் கிடையாது. நான் மணம் முடித்தபோது எனக்கு சமைக்கவே தெரியாது! எனக்கு சமையல் சொல்லித் தந்ததே அவர்தான். எனது சமையல் சில சமயங்களில் நன்றாக இல்லாவிட்டாலும் ஒரு முறைப்பாடும் தெரிவிக்காத மிக நல்ல மனிதர் அவர்.

பிறரைக் குறை கூறும் குணம் அவருக்கு தெரியவே தெரியாது. எந்த ஒரு பிரச்சினை இருந்தாலும் சதா சிரித்த முகத்துடனேயே இருப்பார். அவர் மிகவும் எளிமையானவர். அதிக ஆடம்பர உடைகள் அணிய மாட்டார். அதிகமான ஜீன்சோ, Brand Shoeவோ விரும்ப மாட்டார். கைக் கடிகாரம் கட்டுவதில்லை. நகை எதுவும் அணிய மாட்டார்.



விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

தனது இறுதிச் சடங்குகள் எப்படி செய்யப்பட வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனார். தமிழ் முறைப்படி செய்யுங்கள். மிக எளிமையாக செய்யுங்கள். எனக்கு Coat suit அணிவிக்க வேண்டாம். தமிழ் முறைப்படி வேட்டி, ஷேர்ட் உடுத்தும்படி சொல்லுங்கள். இப்படியாக தாம் இறக்கப் போவது பற்றி October மாதத்திலேயே அவருக்கு தெரியும். அவரது 2 வருடகால Medical Treatment Fail பண்ணியதும் தாம் End of LifeUS வந்து விட்டார் என்பது அவருக்குத் தெரியும். இதைச் சொல்லும்போது அவர் கண் கலங்கினார். அவர் நல்ல கணவர் என்பதால் அந்தக் குறுகிய காலத்தில் எனக்கும் மகனுக்கும் பணக் குறைபாடோ வேறு வாழ்க்கை கஷ்டங்களோ வராமல் எங்களை பாதுகாத்து அறிவுரைகள் தந்துவிட்டு போயிருக்கிறார்.

இந்த Funeral Service ஏற்பாடுகள் கூட அவர் சொன்ன முறையில்தான் நான் செய்திருக்கிறேன். அவர் சொன்னார், On Line இல் Funeral Service Number கள் இருக்கு. எல்லோருக்கும் நீங்கள் பேசி என்ன Amount க்குள் செய்வது என்று முடிவு செய்ய வேண்டும். நீண்டகாலம் வைத்திருக்க வேண்டாம். தன் அப்பா, அம்மா பார்க்க வேண்டும் என்பதற்காக இடம் கொடுக்க வேண்டாம் என்று கூறியதோடு தன் இறுதி ஆசைகளையும் என்னிடம் சொன்னார்.

நீங்கள் எல்லோரும் நினைப்பது போல என் கணவர் இறந்துவிடவில்லை.

தனக்கு இரண்டு ஆண் குழந்தைகள் என்பது என் கணவர் கூறியிருக்கிறார். தான் இறந்த பின் என்னை இரண்டாவது குழந்தை பெறும்படி கேட்டு தன் Sperns ஐ மருத்துவர்களிடம் வைத்திருக்கிறார். இன்னும் ஒரு பையன் வடிவத்தில் என் கணவர் மீண்டும் பூமிக்கு வருவார் என்று நான் திடமாக நம்புகிறேன்.

அவருக்கு அழுவது பிடிக்காது. தைரியமான ஒருத்தியாக என்னை அவர் மாற்றியிருக்கிறார். 7 வருடங்களாக மிக நல்ல ஒரு மனிதரோடு வாழ்ந்தேன். இது மிகக் குறுகிய காலம் அல்ல. ஒரு மோசமான மனிதனோடு 30 வருடங்கள் வாழ்வதை விட எனது 7 வருட மண வாழ்வு எவ்வளவோ மேல். அவர் என்னை திட்டியதில்லை, உடல் ரீதியாகவோ பாலியல் பீதியாகவோ என்னை துன்புறுத்தியது கிடையாது.

எனக்கு Privacy இருந்தது. எனக்கு Freddom இருந்தது. தைரியமான பெண்ணாக

28 ஆம் பக்கம் பார்க்க...




Luckyfly
Lucky Fly Reisebüro
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
2023
EARLY
BOOKING
OFFER
QATAR
Summer
holidays
899€
அனைவருக்கும் எமது
சித்திரைப் புத்தாண்டு
நல் வாழ்த்துகள்
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
SriLankan
QATAR
AIRWAYS القطرية
Emirates
طيران الخليج
Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# நான் வில்லனாக இருந்த கணப்பொழுது

## மேசையில் ஒரு தனி வாழைப்பழம்

பாடசாலை வகுப்பறையாக, அசம்பிளி மண்டபமாக, மதிய உணவு உண்ணும் மேசையாக, பாடசாலை விளையாட்டு மைதானமாக, சைக்கிள் நிற்பாட்டும் இடமாக, இவை எதுவாக இருந்தாலும், முதல் எப்படி எங்கு இருந்தோமோ, எங்கு இருந்து மைதானத்தில் விளையாட்டு பார்த்தோமோ, எந்த இடத்தில் சையிக்கிள் நிறுத்தினோமோ, அந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் அமரமாட்டோம்.நிற்க மாட்டோம் நிறுத்த மாட்டோம்.இது எழுதாத உறுதிப்பத்திரம்.அந்த இடத்தை யாரும் எடுத்துவிட்டால் போதும், உறுதிப்பத்திரம் உறுமும்.

பாடசாலை வருட தவணை முடிந்து அடுத்த வகுப்பிற்கு போனாலும், வேறு வகுப்பறையானாலும் அதே இடம் கிடைத்துவிடும். காரணம் நல்லதோ கெட்டதோ எல்லோரும் தமது முதல் ஆண்டில் வகுப்பறையில் இருந்த நிலைகளையே அவர்களும் விரும்பி எடுப்பார்கள். பாடசாலை இறுதி நாட்களில் அவற்றை விட்டு விலகும் போது அவை யாவும் பல கதை பேசும்.இவை பல ஆண்டுகள் கற்ற பாடசாலை கதைகள். அது சரி என்று விடுங்கள்.

பலர் ஒரு வாரம் பாவிக்கும் ஒரு இடமாக இருந்தாலும், முதல் இருந்த இடமே அவர்களது என்றாகிவிடும்.ஒரு வாரம் விடுமுறைக்கு ஸ்பெயின் நாட்டுக்கு சென்றோம்.யேர்மனியில், 05°பாகை, அங்கோ 26°நடந்து செல்லும் தூரத்தில் கடல்.காலை, மதியம், இரவு உணவுகள் யாவும் ஹோட்டலில்.மூன்று மணி நேரம் நாம் விரும்பிய இடத்தில் இருந்து விரும்பியதை உண்ணலாம். யாவருக்கும் போதுமான உணவு உண்டு.

முதல் நாள் உண்பதற்கு சென்றோம், வேண்டிய உணவை தட்டில் போட்டுவிட்டு, இருக்கைகள் யாவற்றையும் உற்று நோக்கினோம், ஒரு இடம் தெரிந்தது. அதில் சென்று அமர்ந்தோம் . சௌகரியமான இடமாக இருந்தது. ஒரு போட்டியும் இன்றி தெரிவாகும் அரசியல் தலைவர்களின் மகிழ்ச்சிக்கு ஈடாக அது இருந்தது. ஏதோ முற்பிறப்பில் நாம் ஒன்றாக இருந்து உண்ட இடம் போல் அந்த இடம் ஈர்த்தது. மனிதர்கள் மட்டுமல்ல சில காட்சிகளை முதல் முறை கண்டாலும், எமக்கு முன்பு நன்கு பரீட்சையமான இடம் போல் இருக்கும். அதே போன்று ஒரு இடம் இப்போ எமதானது.



● மாதவி

நான்காம் நாள் உண்பதற்கு வர அந்த இடத்தில் இரு கிழட்டு சோடிகள். இருந்து உணவு உண்டார்கள். (அவர்களுக்கு எமைவிட ஒருவயது குறைவாக இருக்கலாம், எமக்கு கோபம் வரும்போது, யாராக இருந்தாலும் கிழடுகள் என்று தானே சாடுவோம்) என்ன செய்வது உறுதிப்பத்திரம் அந்த இடத்திற்கு இல்லை. ஊர் என்றாலும் காசைக்கொடுத்து கள்ள உறுதி முடிக்கலாம். சரி என்றுபோட்டு பக்கத்தில் இருந்த கதிரையில் இருந்து உண்டோம். அன்று உணவு வழமையைவிட தூக்கலாக இருந்தது. மனைவி நல்லசாப்பாடு, பப்பாபழமும் ருசியாக இருக்கு, உங்களுக்கு பிடித்த (chips) சிப்சும் இருக்கு எடுத்து வந்து சாப்பிடுங்கோ என்றா. எனக்கு( chips) சிப்சும், தெரியலை, பப்பாபழமோ, வாழைப்பழமோ ஒன்றும் புரியலை. விழுங்கிக்கொண்டு இருந்தேன்.

இடம் போன மனவருத்தம், நாவின் சுவையையும் கெடுத்துவிட்டது. எப்படியும்,இரவு உணவுநேரம் சற்று நேரத்திற்கு முன்பாக வந்து, முதல் இடம் பிடிக்க வேண்டும்.என்று எண்ணிக் கொண்டேன். எனது இடத் தில் இருந்து உண்டவர்களுக்கு எங்கட மொழி தெரியாவிட்டாலும், ஏதோ தன் மனுசிக்கு சொல்லிக்கொண்டே கிழவன் எழும்பி போனார்.

நான் நினைக்கிறேன் அவரும் இரவு உணவுக்கு முன்னுக்கு வரவேண்டும் என்றுதான் சொல்லியிருப்பார்.

கடலில் நல்லாக்குளித்துவிட்டு அந்தக் கடல் காற்றோடு கரையில் அமர்ந்துவிட்டு அறைக்கு வந்தாலும், எதனையுமே மனம் இலயித்ததாக இருக்கவில்லை. சுழண்டு சுழண்டு அந்த கிழடுகள் நினைவுதான். எங்கு பிறந்து எங்கே வந்து இப்படி அவர்களை எனக்கு ஒரு வில்லன் போல் ஆக்கிவிட்டது. அவர்களுக்கும் நான் ஒரு பயங்கரவில்லனாக இருப்பேன். அதில் எனக்கு சந்தேகம் இல்லை.என் நிறமும், மொட்டைத் தலையில் நாலு மயிரும் போதாதா.தனிய ஒப்பனை ஏதும் தேவையா.

இரவு உணவு நேரம் வந்தது, அவசரம் அவசரமாக ஓட்டமும் நடையுமாக அங்கு சென்றேன். வழமையாக நான் அமரும், எனது மேசையில் ஒரு தனி வாழைப்பழம் இருந்தது. கோவம் பொத்திக்கொண்டு வந்தது, என்ர இடத்தை பிடிக்க நாம் ஊரில் ரெயிலில், பஸ்களில், கைலேஞ்சி போடுவது போல் இங்கு ஒரு வாழைப்பழம் இடத்தை அடையாளப்படுத்தி அடைகாக்கிறது.

ஒன்றும் செய்ய ஏலாது. உணவை எடுத்துக்கொண்டு நான் நேற்று கிழடுகள் இருந்த இடத்தில் அமரலாம் என்று அவர்கள் இடத்தை நோக்கி வர அந்த இடத்தில் கிழவி இருக்கிது. மனுசன் சாப்பாடு போட்டுக்கொண்டு வருகிறார். கிழவன் என்மேசையைப் பிடிக்க வாழைப்பழம். தன் மேசையைப் பிடிக்க கிழவி. வில்லங்கமான வில்லன்கள் இவர்கள் என எண்ணிக்கொண்டு, நான் அந்த மேசையில் இருக்கும் ஒற்றை வாழைப்பழத்தை பார்க்கிறேன்.

கிழவன் அந்த பழத்தை எடுத்துவிட்டு என்னை அமருங்கள் என்று கைகாட்டினார்.ஏதோ ஒரு மொழியில் உங்களுக்குதான் இடம் பிடித்து வைத்தேன் என்றார். எமக்கு தேவை என்றால் எல்லாமொழியும் விளங்கும் என்று சின்ன வயதில் அப்பா சொன்னது ஞாபகம் வந்தது.

28 ஆம் பக்கம் பார்க்க...






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்


# மாரித்தவளைகளைப்போல அடிக்கடி கத்துவது என்னவோ நாங்கள்தான்

மாரித்தவளைகளைப்போல அடிக்கடி கத்துவது என்னவோ நாங்கள்தான். ஆனால் யாருடைய காதுகளையும் சென்றடைவதில்லை, குறிப்பாக போக்குவரத்து உரிமையாளர் சங்கங்கள், மாவட்ட நிர்வாகம் ஆகியவை இவை பற்றி பேருந்து உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துகின்றனவா அல்லது பேருந்து உரிமையாளர்களும் சாரதிகளும் நடத்துனர்களும் இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் வெளிவிடுகிறார்களா என்பது புரியாத கதை.

பயணிகள் பொதுப் பேருந்து என்பது பயணிகளுக்கானது. தனித்த வாகனங்களை பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறசாமானிய மக்களும் ஏதோ ஒரு தேவையின் நிமிர்த்தம் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்த வேண்டியவர்களுமே பொதுப் பேருந்துகளை நாடுகிறார்கள், தவிர கிழமைக்கு கிழமை QR அடிப்படையில் வழங்கப்படுகிற எரிபொருளை மிச்சப்படுத்தி பயன்படுத்துவதென்பது அடிக்கடி பயணப்படுகிற எங்களைப் போன்றவர்களுக்கு சவாலான காரியம்தான். ஆக இருக்கிற தெரிவு பொதுப்போக்குவரத்து மட்டுமே.




எல்லாவற்றிற்கும் ஒரு ஒழுக்க நெறிமுறை இருக்கிறது. அது எதுவாகினும் அவற்றின் இயல்பிற்கு ஏற்ப அவை மாறுபடும். மதவாச்சியை கடந்தால் எங்களுடைய பிரதேசங்களில் முதியவர்கள், குழந்தைகள், வைத்தியசாலைக்கு செல்லுகிற நோயாளிகள் என்று பலரும் பயணப்படுகிற பொதுப் பேருந்துகளில் பயணிக்க வேண்டும் என்றால் காதுகளை கழற்றி எறியவேண்டும் அல்லது செவிப்பறைச் சவ்வுகளை கிழித்து எறிய வேண்டும்.

சாதாரணமாக ஒரு மோட்டார் சைக்கிள் எஞ்சினின் சத்த அளவு 95 dB, ஆனால் மனித காதுகள் தொடர்ச்சியாக 70dB ற்கு அதிகமான ஒலியை தொடர்ச்சியாக கேட்கிறபோது கேட்கும் திறன் நாளடைவில் பாதிப்படையும். இதுவே 120 dB இனை தாண்டுகிறபோது உடனடியான விளைவுகளை ஏற்படுத்தும் என்கிறது மருத்துவ உலகம். ஆனால் மனிதர்கள் உரையாடுகிற ஒலியின் அளவு 30 dB ஓடு நின்று விடுகிறது என்பதுதான் இங்கு நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயமாகிறது.



சர்மிலா
வினோதினி
(இலங்கை)



ஆக இன்றைக்கு இந்த 03 மணித்தியால பயணம் 80, 90 dB யில் சென்று கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன், சகித்து கொள்ள முடியாத நிலையில் இரண்டு தரம் நடத்துனரை அழைத்து சொல்லியும் விட்டேன். போதாக்குறைக்கு இன்னும் சில பயணிகளும் நடத்துன ரோடு முறைப்பட்டுக்கொண்டார்கள், ஆனால் நடத்துனரின் சொல்லை செவி மடுக்கும் நிலையில் ஓட்டுனர் இல்லை. pub தோற்றுவிடும் அளவிற்கு ஓங்கி ஒலிக்கிறது உச்சம் தலையில் ஓங்கி அறையும் ஓசையும் குத்துப்பாடலும்.

இசை என்பது இனிமை. இசை என்பது மருந்து. மெல்லிய இசையோடு பயணப்படுகிற பயணங்கள் அலாதியானவை. ஆனால் பொதுப் பேருந்துகளில் இத்தனை இசைப்பெட்டிகளைத்தான் பொருத்த வேண்டும். அளவு கடந்த சத்தத்தில் ஒலியெழுப்பும் செயல்களில் ஈடுபடக்கூடாது போன்ற நிபந்தனைகளை குறித்த பேருந்துகளுக்கான route permit இனை வழங்குகிறபோதும் அவற்றை ஒவ்வொரு வருடம் புதுப்பிக்கிறபோதும் மாவட்ட செயலக்தின் நிர்வாகத்தால் கடுமையாக அறிவுறுத்த முடியுமல்லவா? அவற்றை கேட்கிற அளவிற்கு பேருந்து உரிமையாளர் சமூகத்திடம் சமூக பொறுப்புணர்வு இல்லையா? சிறிய வயதில் இருந்து சொல்லிக் கொடுக்கிற pre child edu cation இல் குறையிருக்கிறதா? அல்லது இப்படி எல்லாம் சிந்திக்கிற என்னில்தான் தவறிருக்கிறதா??

எனக்குத் தெரிந்து உணவுதொண்டையால் இறங்க முடியாத நிலையில் வயிற்றில் துளையிட்டு அதனூடாக திரவ உணவை செலுத்துவதற்கான மருத்துவ முறைகளோடு (G tube) A32 வீதிவழியாக இந்தப் பேருந்துகளின்மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சென்று வருகிற எத்தனையோ நோயாளிகளை அறிந்திருக்கிறேன்.

இந்த நாடும் நாங்களும் எப்போதுமே இப்படித்தான்??



அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# உருவக் கேலி! எனும் வேலியை உடையுங்கள்!!!

**கருவாச்சி, கறுப்பி, கட்டை, நெட்டைக் கொக்கு**

இதெல்லாம் பதின்மங்களில் என் நெருங்கிய சில உறவுகளினால் எனக்காக சொல்லப்பட்டு நான் கடந்துவந்த உருவ கேலிக்குரிய வார்த்தைப் பிரயோகங்கள்.பதினேழு பதினெட்டு வயதுகளில் இந்த வார்த்தைகளை கேற்கும்போது மனதுக்குள் ஒருவித அவமானமாக உணர்ந்தபோதிலும் நெருங்கிய உறவுகளை எதிர்த்து பேசமுடியாத மனத் தடங்கல்களினால் மிக இலகுவாக அவற்றை கடக்கப் பழகிவிட்டிருந்தேன். ஆனால், அதே உறவுக்காரர்கள் இருபத்தெட்டு வயதில் என்னை நோக்கி மிக இயல்பாக இதே வார்த்தைகளை பிரயோகித்தபோது, நான் மௌனித்திருக்கவில்லை. அவர்களது முகத்தில் அறைந்தாற்போல் சுரீரென்று பதில் சொல்லியதால் பின்னர் இன்றுவரையில் என்னைக் காணும் உறவுகள் யாரும் மரியாதை குறைவாக இப்படியான வார்த்தைகளை பயன்படுத்துவதனை முற்றிலும் தவிர்த்துக்கொண்டனர். ஆக உருவ கேலி என்பது நமக்குள் சகித்துக்கொண்டு கடந்து போகக்கூடியவொன்று அல்ல.அது எதிர்த்துப்பேசி தவிர்த்துக்கொள்ளப்படவேண்டிய ஒன்று என்கிற விழிப்புணர்விற்காகவே இந்த கட்டுரை.

ஒருவரின் உருவத்தைக் குறிப்பிட்டு கேலி செய்யும் பழக்கம் நம் எல்லோருக்குள்ளும் இருக்கிறது. ஒன்றைக் கவனித்துப் பார்த்தால் தெரியும். நம் எதிரிகளால், பிடிக்காதவர்களால் செய்யப்படுவதைவிட, நெருங்கிய நண்பர்கள் மற்றும் நெருக்கமான உறவுகளுக்குள்தான் இந்த உருவக் கேலி அதிகம் உலா வரும். அதுமட்டுமன்றி கோபமான நேரத்தைவிட, உற்சாகமான நேரத்துக்குள்தான் இது அதிகம் பரவும். உரிமை, நட்பு, ஜாலி என்கிற பெயரில் நம்மை அறியாமலேயே ஹஎல்லை மீறி' இவ்வாறான வார்த்தைகளை பயன்படுத்திவிடுவோம் .மனித மனம் மிக மிக நுட்பமானது. மிக மிகப் புதிரானது. எந்தச் சூழ்நிலையில்,எந்த நொடியில் ஒரு வார்த்தையை, இயல்பாக எடுத்துக்கொள்ளும், மிகத் தீவிரமாக எடுத்துக்கொள்ளும் என்று கணிக்கவே முடியாது. அது புரியாமலே, மிகவும் நேசிப்பவர்களை நம்மை அறியாமலே புண்படுத்திக்கொண்டிருப்போம். ஒருநாள் அது வெடிக்கும்போது, உறவு அல்லது நட்புக்குள் மிகப் பெரிய இடைவெளி விழுந்துவிடும்.

குழந்தைகளிடம்கூட இவ்வாறான உருவ கேலிகள்மூலம் அவர்களது மனதை நோகடிக்கும் பலரையும் நாம் பார்த்திருப்போம். இவ்வாறான குழந்தைகளின்மீதான உருவ கேலிகளானது அவர்களது தன்னம்பிக்கையைக் குலைத்து, அவர்களின் வாழ்வியலையே மாற்றிவிடக்கூடியவை என்பதை யாரும் உணர்வதில்லை.கிண்டல் அடிப்பதன் வழியே தனக்குத் தடையாக இருக்கும் விஷயத்திலிருந்து வெளியே வரமுயலும் குழந்தைகளை, மீண்டும் அதற்குள் தள்ளிவிடும் செயலே இது. மாணவர்களுக்கிடையேகூட பட்டப்பெயர் வைத்து அழைப்பதும் உருவக் கேலிகளை அதிகம் பயன்படுத்துவதும் இந்தப் பருவத்தில் அதிக உற்சாகம் தரும். அதைச் சாதாரணமாக கடந்துசெல்லும் மனப்பக்குவமும் எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் இருக்காது அல்லவா ? சில சமயம், பெரிய சண்டையில்கூட இவை முடிவுறலாம்.

எவ்வளவு நெருங்கிய நட்பாக இருந்தாலும், மிக உரிமைக்குரிய உறவாக இருந்தாலும், ஒரு கேலி வார்த்தையைச் சொல்லும் முன்பு சில நொடிகள் யோசிப்பது நல்லது. அந்த இடத்தின் சூழலையும் சுற்றியிருப்பவர்களையும் அவதானிப்பதுடன் செல்லமான கேலியாக இருந்தாலும், அதை ஒரு வரம்புக்கு மேலே பயன்படுத்துவது என்பது நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. நட்புக்குள் மட்டுமல்ல சகோதரங்களுக்குள்ளும் உருவ கேலி, குணநலன் கேலி செய்யக் கூடாது என குழந்தைகளுக்கு சொல்லி வளர்ப்பது நல்லது. வீட்டுக்குள் அப்படி ஒருவரை இன்னொருவர் சொல்லும் போது, விளையாட்டுதானே என்று விடாமல், ஆரம்பத்திலேயே சொல்லி கட்டுப்படுத்துவ தென்பது ஓர் ஆரோக்கியமான உறவுக்கு மட்டுமல்ல சிறந்த சமூகத்தினை உருவாக்கவும் உதவும்.





பிரியா இராமநாதன் (இலங்கை)

எல்லா காலகட்டங்களிலும் உருவ கேலி என்பது மிகவும் சாதாரணமாக இடம்பெறுவதும், அவை மிக இலகுவாக கடந்துவரப்படுவதும் ஒருவித நெருடலையே ஏற்படுத்துகின்றதெனலாம். திரைப்படங்கள், பாடல்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றிலும் எவ்வித குற்றவுணர்வுகளுமின்றி இவ்வாறான உருவ கேலிகள் காலங்காலமாக இடம்பெற்றுவருகின்றதெனலாம். தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை கவுண்டமணி முதல் தற்போதுள்ள நடிகர்கள்வரை பெரும்பாலானவர்கள் உருவ கேலியைச் செய்துள்ளனர். ஆனால், 80களின் காலகட்டத்தையும், தற்போதுள்ள காலகட்டத்தையும் ஒப்பிட முடியாது அல்லவா? நாம் நிறைய விடயங்களில் முற்போக்கை நோக்கி நகர்ந்திருக்கிறோம். அவ்வாறு இருக்கும்போது அறமற்ற உருவ கேலிகளை நகைச்சுவை என்ற பெயரில் கலைப் படைப்புகளாக வருவதை எப்படி அனுமதிக்க முடியும். “இதெல்லாம் ஒரு பிரச்சினையா? சிரிச்சிட்டு போய்விடலாம்“ என்று தோன்றும். ஆனால், உளவியல் ரீதியாக அணுகினால், உண்மையை, அதாவது உள்ளதை உள்ளபடி ஏற்றுக் கொள்ள மறுக்கும், ‘உடலமைப்பு என்றால் இப்படி தான் இருக்க வேண்டும், இது மட்டும் தான் அழகு‘ என்ற பிசகான எண்ணம் இருப்பது புரியும்.

பெரும்பாலும், மனிதர்களுக்கு படித்தோ, கேட்டோ வரும் எண்ணப் பதிவுகளை விட, கண்ணால் பார்க்கும் விஷயங்கள் தான் எளிதாக, மனதில் பதியும். தற்போதைய சூழலில் நிறைய விஷயங்களில் சினிமாக்களை முன்னோடியாக வைத்துதான் மக்கள் பல செயல்களை செய்கின்றனர். அந்த வகையில் திரைத்துறை ஒரு நூலகமாக

10 ஆம் பக்கம் பார்க்க...






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




# இலண்டனில் 'பிரவாக 2023'





## பல்வெறு நாட்டு திறமை மிக்க நடன கலைஞர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள்

"சாஸ்வதம்" எனும் அமைப்பின் "பிரவாக 2023" இங்கிலாந்து சலங்கைநர்த்தனால நுண்கலை கூடத்தால் பாரதிய வித்திய பவன் லண்டனில் 11.03.2023 அன்று வெகு சிறப்புடன் நடந்தது. இதில் பல்வெறு நாட்டு திறமை மிக்க நடன கலைஞர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள். இதன் நிறுவனர் குரு.கலாநிதி. ஜெயந்தி யோகராஜா, இணை நிறுவனர் ஸ்ரீமதி.பவித்திரா சிவயோகம், குழு உறுப்பினர்கள் சங்கியா யோகராஜா, ரூபேஷ் ஆகியோரால் நடாத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினராக மலேஷியாவிலிருந்து வந்த குரு ஸ்ரீ கணேஷினுக்கு "கலா போஷிகா " எனும் விருதை குரு.ஜெயந்தி யோகராஜா வளங்கி கௌரவித்தார். முக்கிய விருந்தினர்களாக நடன ஆசிரியர்களான ஸ்ரீமதி ராகினி ராஜகோபால், ஸ்ரீமதி பாமினி சித்தரஞ்சன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார்கள். வஸ்திரா, டி றிஸ்க் 360, இமை மீடியா ஆகியோர் அனுசரணை வளங்கியிருந்தார்கள். மண்டபம் நிறைந்த ரசிகர்களின் முன் சாஸ்வதம் "பிரவாக 2023" நிகழ்ச்சி சிறப்பாக நடந்து முடிந்தது.

09 ஆம் பக்க தொடர்ச்சி...

## உருவக் கேலி! எனும்...

செயல்படுகிறது என்பது தான் உண்மை. உடல் சார்ந்த ஒரு நகைச்சுவை காட்சியை எழுதி அதைத் திரையில் கொண்டு வந்து சிரிக்க வைக்க முயலும் போது, குறிப்பிட்ட பணியில் இருக்கும் துறை சார்ந்தவர்களுக்கு அது ஒரு வணிகப் பொருள்.

ஆனால், தெரிந்தோ தெரியாமலோ, இது போன்ற காட்சிகள் பார்ப்பவர்கள் மீது ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறன்றன.

அதைத் தொடர்ந்து அவர்கள் குறிப்பிட்ட உடலமைப்பு உடையவர்களை கிண்டல் செய்து மற்றவர்களின் மனதை கஷ்ட படுத்துகிறார்கள். இதுவும் ஒரு வகையில் சமூக சீர்கேடு தான் இல்லையா ? ஒரு சில திரைப்



படங்களில், குறிப்பாக பழைய திரைப்படங்களில், நகைச்சுவையை வேறு விதமாக கையாண்டிருப்பார்கள். நகைச்சுவை நடிகர்கள் தங்களைத் தாங்களே சுயவிமர்சனம் செய்து மற்றவர்களை சிரிக்க வைப்பார்கள். சார்லி சாப்ளின் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். ஆனால் இப்போது சில வருடங்களாகவே, இந்த நிலை தலைகீழாக மாறி உள்ளது. நகைச்சுவை நடிகர்கள் மற்றவர்களை கேலி செய்து தன்னை நிரூபித்துக் கொள்வது போல் காட்சி அமைக்கிறார்கள். இது நிச்சயம் மாறவேண்டிய சிந்தனை.அன்று நாகேஷ், இன்று யோகிபாபு இவர்கள் இந்த உருவக் கேலிக்குள் இருந்து வேலிதாண்டியவர்கள். ஒருவரின் உடல் அமைப்பை அவமானப்படுத்துதல் அவர்களுடைய சுயமரியாதையை இழக்க செய்கிறது. இரு பாலினத்திற்கும் மனச்சோர்வு, மன அழுத்தம், பிரச்சனைகள் இருந்தாலும், பெண்களின் மீது இதன் தாக்கம் அதிகம். உதாரணமாக உடல் எடை அதிகமாக உள்ள பெண்கள் மற்றவர்களுக்கு கேலிப்பொருளாவது.ஒருவரை மகிழ வைக்க, நகைச்சுவையாகப் பேசிக்கொள்ள எவ்வளவோ வழிகள் இருக்கின்றன.

அப்படியிருக்கையில் ஏன் அடுத்தவரை கேலி செய்வதன் மூலம் ஒருவிதமான குரூர இன்பத்தை அடைய நினைக்கவேண்டும் நாம் ?

டொட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

கீபோர்ட் (Keyboard)
18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!



தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00–17:45
சிறார்களுக்கும், இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)




19:15– 20:15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்.
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்.

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



## அன்பின் நிமித்தம் பிள்ளைகளுக்கு வாரி வழங்கும் விளையாட்டுப் பொருட்கள்

# நன்மைக்கா? தீமைக்கா?

இன்று இரு பெற்றோரும் தொழில் பார்க்கும் மத்தியதர குடும்பங்களே பெருகி வருகிறது. கணவன் என்பவன் வருவாய் தேடி உழைப்பவன். இல்லாள் அல்லது இல்லத்தரசி அவன் உழைத்துக் கொண்டுவரும் சம்பாத்தியத்தில் வீட்டை நிர்வகிப்பவள் குடும்பத்தைப் பராமரிப்பவள் என்பதெல்லாம் இன்று பழங்கதையாகி விட்டது. இன்று இல்லாள் ( இல்லத்தை ஆள்பவள் ) என்ற பதம் அர்த்தமற்றதாகி விட்டது.

பெற்றோர் இருவரும் சம்பாதிக்கும் குடும்பங்களில் பிள்ளைகளும் அதற் கேற்ப ஒரு புதிய சூழலில் வளர்கிறார்கள். ஒருவர் உழைக்கும் குடும்பத்தில் ஓரளவு பணப்பற்றாக்குறை இருப்பதற்கு இடமுண்டு. இன்னும் சரியாகச் சொல்வதானால் அதிகப் படியான ஆடம்பரங்களுக்குப் பற்றாமை என்பதே சரியானது. இதனால் ஒருவர் சம்பாதிக்கும் குடும்பங்கள் ஆடம்பரமற்ற வாழ்வை வாழ்ந்து வந்தனர். பிள்ளைகளின் எண்ணிக்கையும் ஒன்றோ இரண்டாகவோ தான் இருந்தது. இதனால் பிள்ளைகளுக் காகச் செலவு செய்ய இவர்களிடம் பணம் போதுமாக இருந்தது.

இன்றய தலைமுறைச் சிறார்கள் புதிய வசதிகளை அனுபவிக்கும் ஒரு புதிய தலை முறையாக உருவாகி வருகிறார்கள். இந்தப் புதியத் தலைமுறைப் பெற்றோரிடமும் பணம் இருப்பதால் வேலை விட்டு வந்து பிள்ளைக ளின் நன்மை கருதி அவர்களை வெவ்வேறு பட்ட வகுப்புகளுக்கு அழைத்துச் செல்வது வழமையாகி விட்டது. சில 8, 10 வயதுக் குட்பட்ட பிள்ளைகள் சங்கீதம், உதைப்பந் தாட்டம், கூடைப்பந்து, நீச்சல், பரதநாட்டியம் என 4 அல்லது 5 வேறுபட்ட கலைகளைக்



கற்று வருகிறார்கள். எனினும் இவைகள் அனைத்திலும் அவர்கள் தேர்ச்சிபெற்றவ ர்களாக வருவார்களா என்பது சந்தேகமே.

தாய் என்பவளைப் பொறுத்த வரை யில் தான் போதியளவு நேரத்தை பிள்ளைகளுடன் செலவு செய்ய முடியா மையால் அவளுக்கு ஒரு குற்ற உணர்வு ஏற்படுகிறது. அதை ஈடு செய்யும் வகையிலே தனது வருவாயின் பெரும் பகுதியைத் தன் வாரிசுகளுக்காகச் செலவு செய்வதில் அவள் திருப்தி காண்கிறாள். மறுபக்கத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு சகல வசதிகளையும் கொடுப்பதால் அவர்களின் வருங்காலம் நல்லாக அமையும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

மறுபுறத்தில் இன்று சிறாரை மையமாக வைத்து பல தொழில்களும் இயங்கி வருகி ன்றன. முன்பு எப்பொழுதும் கண முடியாத அளவுக்கு இந்தத்துறை நன்கு வளர்ந்து வருகிறது. முக்கியமாகப் பிறந்த தினக் கொண்டாட்டங்கள் பல நூறு டொலர்கள் செலவில் நடைபெறுகிறது. இதை ஒழுங்கு செய்வதற்கென்றே பல ஸ்தாபனங்க ளும் இன்று உருவாகி வருகின்றன. பல குடும்பங்களிலே இன்று உற்றார் உரவி னருக்கு ஒரு விதமான கொண்டாட்ட முறை தமது தோழ தோழியருக்கு வேறு விதமான கொண்டாட்ட முறை என்றெல்லாம் அது விரிவு பெற்றுச் செல்கிறது. இவை எல்லாம் சந்தோஷம் கருதி மட்டும் நடைபெறுபவை அல்ல. போட்டி பொறாமைகள் மற்றும் ஒப்பீடுகளும் இவற்றுள்ளே கலந்துள்ளன.

அறியாப்பருவத்தில் இருக்கும் தமது வாரிசுகளுக்கு நல்லறிவு புகட்ட வேண்டிய பெற்றோர் அதை மறந்து இந்தச் சிக்கலில் தம்மையும் இணைத்துக் கொள்ளுகி றார்கள்.பெற்றோர் தமது வாரிசுகளுக்கு விலையுயர்ந்த விளையாட்டுப் பொருட்களை வாங்குகிறார்கள். சில சமயம் பெற் றோர் காட்டும் ஆர்வம் தமக்காக அவற்றை வாங்குகிறார்களா அல்லது பிள்ளைகளுக் காகவா என்று சந்தேகப்பட வேண்டி உள்ளது என்கிறார் ஒரு வியாபாரி.



நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்
(அவுஸ்திரேலியா)

சிறுவர் விளையாட்டுப் பொருட்களைத் தாமாகவே கற்பனை செய்து விளையாடுவது மூளை விருத்திக்கு அத்தியாவசியமாகும். ஒரு அட்டைப் பெட்டியே குழந்தையின் உள்ளத்தில் கார் ஆக மாறுகிறது அதே பெட்டி பின்னர் பிளேன் ஆக மேலே பறக் கவும் கீழே இறங்கவும் செய்கிறது. அப் பிள்ளையின் விளையாட்டில் கற்பனையும் சிந்தனைகளும் இவ்வாறு வளர்கிறது. ஒன்றைப் பார்த்து அதையே கற்பனையாகப் பாவனை செய்வது சிறுவர்களின் வளர்ச்சி யில் முக்கிய பங்கு வகிக்கிறது. குழந் தைக் கல்வி பற்றிய ஆய்வுகளும் மனோதத் துவ நிபுணர்களும் இதைப் பலவாறாக வற்புறுத்துகிறார்கள். ஆனால் பெற்றோர் அதை சட்டை செய்வது இல்லை என்றே தோன்றுகிறது.

விளையாட்டுப் பொருட்களின் எண்ணி க்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவை குழந்தைக ளின் மனோ வளர்ச்சிக்கு அத்தியாவசியமா என ஆராய்வதற்கு எந்த ஒரு அமைப்பும் கிடையாது. விளம்பரதாரரும் வியாபாரிக ளும் விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்து விளம்பரப்படுத்தி அவர்களது வியா-பாரம் மட்டும் அபாரமாக நடக்கிறது.

இன்று பெற்றோராக இருக்கும் பலரும் பெரும்பாலும் பெற்றோரின் கட்டுப்பாட்டில் வளர்ந்தவர்கள். சிறுவர்களுக்குத் தேவை எது தேவையற்றது எது என நிர்ணயி க்கும் உரிமை பெற்றோரதாகவே அன்று இருந்தது. இன்று நிலைமை மாறி விட்டது. பல வீடுக ளில் தமக்கு எந்த வகைக் கார் வேண்டும் என்பதைப்

28 ஆம் பக்கம் பார்க்க...

Nandy's Catering & Partyservice
சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de


ADS BESTFOODS
ADS BEST FOODS
நீங்கள் இந்தப் புத்தாண்டின்
அதிஸ்டசாலியா...
வாருங்கள்...
கொள்வனவு செய்து நீங்களும்
அதிஸ்டசாலியாகுங்கள்
வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்
எமது புத்தாண்டு சிறப்பு தள்ளுபடி
05 - 15. 04. 2023 வரை மட்டுமே!
உங்கள்
இல்லங்களுக்கு
தேவையான அனைத்து
அத்தியாவசியப் பொருட்களும்
இப்போது ஒரே இடத்தில்!
0231 650 46 883
0176 45 95 62 73 // RHEINISCHESTR. 79-81 // 44137 DORTMUND




# மதங்கமோடு தமிழ் முழங்கவே



அபிநயக்ஷேத்ரா வழங்கிய மற்றுமொரு மைக்கல் அரங்கேற்றமௌ பலராலும் பாராட்டப்பட்ட அரங்கேற்றமாக நிர்ஷ்ராயா கஜனின் பரதநாட்டிய அரங்கேற்றம் 25.02.2023 புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆடலின் மொழியைக் கண்டடைதலும், அம்மொழி உணர்தலும், மொழிகடந்த வெளியை அனுபவிப்பதும் பெருநிலை எனில்,நம் தாய்மொழி வழி பிறக்கும் ஆடலில் பெறும் பெருங்களி, நம் பிறவிப் பயனை உணர்த்தி நிறைவு தருகிறது.

சவால் விரும்பியாக, நுண்ணியலை ஏற்கத் துணிந்த தைரியமும், பேரார்வமும் கொண்ட நிர்ஷ்ரயாவின் மௌன மொழி தவழ் கற்கை யுக்தி, இன்னும் இன்னும் புத்தனுபவங்களைக் கொணர்ந்தது. அக் குழந்தமைக்குள் விளைந்த கூர்மையை உணர்ந்து முத்தமிழ் முழங்க வேட்கை கொண்டோம்.

காலந்தோறும் கற்றலின் வழியே பெற்றதாகக் கருதி உணரும் செல்வங்களை, ஆடலின் வழியே அடுத்த தலைமுறையினருக்கு அண்மைப்படுத்தும் பெரு விழைவின் நீட்சியாக, காலந்தோறும் நிற்கும் தமிழ் இலக்கியத் திரவியங்களை இயன்றளவு தொகுத்து நாட்டிய மார்க்கத்தில் உள்வாங்க முயன்றோம். இம்முயற்சிக்குப் பேரருளெனத் தேமதுரத் தமிழோசைக்கு இசையமுதளித்து அமர சுகம் தந்த ராஜ்குமார் பாரதி ஐயாவை வியந்து வணங்குகிறோம்.

பன்னெடுங்காலத்துப் பெருஞ் சொத்தினைப் பேணிப் பெறப் பேறு பெற்றோராய், மொழி கிளறிக் கிளைக்கும் இக் கலைப் படைப்பின் தரமறிந்து,தொல்காப்பியர் முதல் பாரதி தாசன் வரை என பதின்னான்கு தமிழ் புலவர்களை காலக் கிரமப் படி வரிசைப்படுத்தி அதனை நாட்டிய மார்க்கமாக வழங்கிய பெருஞ் செயலை ஏற்று அர்ப்பணிப்புடன் அரங்கேறினாள் நிர்ஷ்ராயா கஜன். தமிழ் அன்னை உட்பட இப்பதின்னான்கு தமிழ் அவதாரங்களுக்குமான தமிழ் சுடரேற்றி நிகழ்வு ஆரம்பமானது.

“வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப“ என தொல்காப்பியத்தில் உள்ள வாழ்த்தோடு ஆரம்பமாகி திருக்குறள் புஷ்பாஞ்சலி இடம்பெற்றது. தொடர்ந்து “ மதங்க “ தாளத்தில் தமிழின் உயிர் , மெய் எழுத்துக்களை இணைத்து அலாரிப்பு அமைக்கப்பட்டிருந்தது.

ஆடலும் பாடலும் அழகும் என்று இக்கூறிய மூன்றின் ஒன்று குறை படாமல், ஏழ் ஆண்டு இயற்றி, ஓர் ஈர் - ஆறு ஆண்டில் மாதவி அரங்கேறினாள் என சப்த தாள ஜதீஸ்வரத்தின் நிறைவில் குறிப்பிட்டு இளங்கோ அடிகளை நினைவேந்தினோம் வர்ணத்தில் நான்காம் நூற்றாண்டின் காரைக்கால் அம்மையார் முதல், கோதை நாச்சியார், ஔவையார், கம்பர், உமாபதி சிவாச்சாரியார், கடவுள் மாமுனி,பரஞ்சோதி முனிவர், தாயுமானவர், வள்ளலார் என பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை சிட்டைப்படுத்தி, மிக நுட்பமாக கோர்த்தெடுத்து வழங்கி மகிழ்ந்தோம். இதன் ஜதிகளை மிகப் பொருத்தமாகவும் புத்தாக்கமாகவும் அமைத்து தந்தார் ராஜ்குமார் பாரதி ஐயா.

நிகழ்வின் முற்பகுதி பழமையான தமிழை காட்டி நிற்க , இரண்டாம் பகுதி நவீனத்துள் நுழைந்தது. சூரிய மண்டலம், வான் வெளி, நட்சத்திரங்கள், நிலவு, கோள்கள் என பாரதி வியந்த விண்வெளியை மண்ணுக்கு கொணர்ந்தோம். எண்ணமுணர்ந்து துணை நிற்க இந்தியாவில் இருந்து வருகை தந்தார் பிரபல ஒளியமைப்புக் கலைஞர் திரு வெங்கடேஷ் கிருஷ்ணன் அவர்கள்.


“செங்கதிர் தேவன் சிறந்த ஒளியி னைத் தேர்கின்றோம் அவன் எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக“ அடு த்து பாரதி தாசனின் நூலைப்படி பாடல் இடம்பெற்றது. தமிழர்களாகிய நாமெல்லாம் சங்கத்தமிழ் நூல்களை படிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் முகமாக இந்நடனம் அமைந்தது.

நிறைவு நிகழ்வாக தில்லானா இடம்பெற்றது. துவி ராகத்தில் ஆதி தாளத்தில் இம்மை மறுமை தவமே தமிழே என தில்லானா அமைந்தன. வாய்ப்பாட்டு திருமதி வித்யா கல்யாணராமன், வயலின் திருமதி கி.பி நந்தினி, மிருதங்கம் திரு வேதகிருஷ்ணன் ஆகிய அணிசேர் கலைஞர்களும் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்தனர்.

டாக்டர் ராஜ்குமார் பாரதி ஐயா முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்க,பேராசிரியர் சி மௌனகுரு ஐயா, மறைமலையடிகளாரின் பெயர்த்தி கலைச்செல்வி அம்மா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக சிறப்பிக்க அரங்கதிரும் கரவொலிகளைப் பரிசாகப் பெற்றோம். தமிழிற்கு இசை தந்து, அபிநயம் தந்து உயிர் தந்த இவ்வரங்கேற்ற நிகழ்வு தமிழின் பெருமையை உணர்த்தியதோடு இனிவருகின்ற தலைமுறையினருக்குள் தமிழார்வத்தை தூண்டுவதாகவும் அமைந்தது.

“ மதங்கமொடு தமிழ் முழங்கவே“ மார்க்கத்தை உருப்பெறச் செய்து அரங்கேற்றப் பெருந்துணையாகி நின்ற நெருங்கியோர்க்கு அபிநயக்ஷேத்திராவின் மொழி தோற்கும் அன்புகளும் நன்றிகளும் சென்றடைக.






அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# உலகப் பொருளாதாரமே சீர்குலைந்தது!

## ரஷ்யா - உக்ரைன் போர் ஒரு வருடம் முடிவடைந்த நிலையில் 24.02.2022 - 24.02.2023

வ.சிவராஜா (ஜேர்மனி)

ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கிடையிலான போர் மூண்டு ஒரு வருடம் (24.02.2022 - 24.02.2023) நிறைவடைந்த நிலையில் மாபெரும் உயிரழிவுகளும் சொத்து வீடுகள் பொருளாதாரம் கல்வி சுகாதாரம் என அழிந்ததுடன் பொதுமக்களின் இயல்பு வாழ்வும் சீரழிந்திருக்கின்றன. கோடிக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருப்பதுடன் பல கோடி சொத்துக்களும் அழிந்திருப்பதால் உலகப் பொருளாதாரமே பாதிப்படைந்து உலகில் பெரும் பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

2வது உலகப்போரின் பின் உலகின் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் இப்போரானது முடிவு பெறாத யுத்தமாகவே இருந்து வருகின்றது. உலகப்போர் முடிவடைய 1949ம் ஆண்டு 12 நாடுகள் ஒன்றுகூடி தமது பாதுகாப்பைப் பலப்படுத்த நேட்டொ அமைப்பை உருவாக்கின. இன்று இந்த நாடுகளின் எண்ணிக்கை 30 நாடுகளாகக் காணப்பட இன்னும் சில நாடுகள் இந்த அமைப்பில் உரிமைபெற விண்ணப்பித்திருக்கின்றன.



சீனா ரஷ்ஷியா நாடுகளின் பலத்தை கட்டுப்படுத்தி குறைப்பதற்காகவே இந்த அமைப்பு செயற்பட்டு வருவதை அவதானிக்கின்றோம்.

நேட்டொ அமைப்போடு உக்ரைன் நாட்டைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்பதே ரஷ்ஷியாவின் நிலைப்பாடு. காரணம் உக்ரைன் போலந்து போன்ற அயல்



நாடுகளில் நேட்டோ நாடுகளில் படைகள் மற்றும் ஏவுகளை ஆயுதக்குவிப்பால் ரஷ்ஷியாவிற்கு ஆபத்து நேரிடலாம் என்பதே முக்கிய காரணமாகும். இதனால் முறுகல் ஏற்படவே இரு நாடுகளுக்கு மிடையே 24.2.2022 அன்று போர் மூண்டது. இதனால் நேட்டோ நாடுகள் மற்றும் அமெரிக்காவின் ஆலோசனை படைத்தரப்பு உதவிகள் ஆயுத உதவிகள் நிதி உதவிகள் கிடைக்கவே போர் உக்கிரமடைந்து மாபெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

உக்ரைனில் ரஷ்ஷியப்படைகள் பல பிரதேசங்களைக் கைப்பற்றிப் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதை எதிர்த்து ஐக்கியநாடுகள்சபை மற்றும் நேட்டொ அமைப்பு ஆசியொ ஐரோப்பியநாடுகள் சில ரஷ்ஷியப்படைகள் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் எனக்கோரி வருகின்றன.

ஆனால் ரஷ்யப் படைகள் விலகவே இல்லை. இந்நிலையில் இருநாடுகளுக்குமிடையிலான போர் தொடர்கின்றது.

★ பங்குனி - 2022 உக்ரைன் தலைநகர் கீவ் நகரைக் கைப்பற்ற ரஷ்யப்படைகள் முடியாமல் உலகின் மிகப்பெரிய அணு மின் உற்பத்தி நிலையத்தைக் கைப்பற்றியுள்ளது.

சித்திரை - 2022 பதிலுக்கு ரஷ்யாவின் மிகப்பெரிய போர்க்கப்பலை உக்ரைன் நாட்டுப்படைகள் மூழ்கடித்தன.

★ வைகாசி - 2022 உக்ரையினின் மிகப்பெரும் நகரங்களில் ஒன்றான 'மரியபோல்' நகரத்தை ரஷ்யப்படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன.

★ஆனி - 2022 அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் பெருமளவு ஆயுதங்களை உக்ரையினுக்குக் கொடுத்து உதவின




★ ஆவணி - 2022 ரஷ்யாவால் பல வருடங்குளுக்கு முன்னர்(2014) ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியான கிரிமியாப் பகுதியில் ரஷ்ஷிய விமானத்தளத்தில் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. பதிலுக்கு ரஷ்யா நாடு உக்ரையினின் மின் நிலையங்கள் குடிநீர் விநியோக நிலையங்கள் மீது தாக்குதல் நடாத்தியது.

★ புரட்டாதி - 2022 ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட கார்க்கில் நகர சில பகுதிகளை உக்ரைன் படைகள் மீண்டும் கைப்பற்றின.



★ ஐப்பசி - 2022 கிறிமியா தீவையும் ரஷ்யாவையும் இணைக்கும் பெரிய பாலம் ஒன்று லொறிக்குண்டு வெடிப்பில் தகர்க்கப்பட்டது. பதிலுக்கு ரஷ்யா உக்ரைன் அணுமின் நிலையங்கள் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டது

★ கார்த்திகை - 2022 அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் உதவியுடன் உக்ரைன் நடாத்திய தாக்குதலில் 'கெர்சான்' மாநிலத்திலிருந்து ரஷ்யப் படைகள் பின்வாங்கின.

'மார்கழி - 2022 உக்ரைன் ஆளில்லாத போர் விமானங்களைப் பயன்படுத்தியதாக ரஷ்யா குற்றம் சாட்டியது. உக்ரைன் அதிபர் அமெரிக்கா சென்று அமெரிக்க ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

17 ஆம் பக்கம் பார்க்க...










சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

# வீட்டுக்கு ஒரே பிள்ளையா?

குழந்தைகள் இறைவனால் அருளப்படும் கொடைகள். குழந்தைகள் வரமா இல்லையா என்பதை குழந்தை வரம் தேடி அலைபவர்களிடம் கேட்டால் புரியும். ஏக்கம் இல்லாமலேயே குழந்தை வரம் வாய்த்து விடுபவர்கள் பல வேளைகளில் குழந்தைகளின் அருமையைப் புரிந்து கொள்வதில்லை.

குழந்தைகள் கடவுளின் குட்டி வடிவம். மகா சக்தியின் மினியேச்சர். அதை கடவுள் நம்மிடம் கொடுத்திருக்கிறார். “குழந்தைகள் உங்களால் வரவில்லை, உங்கள் மூலமாய் வந்திருக்கிறார்கள்“ என்கிறார் கலீல் ஜிப்ரான். அந்தக் குழந்தைகளை மிகச் சரியான வகையில் வளர்க்கும் பொறுப்பு நமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

என் பெற்றோருக்கு ஏழு பிள்ளைகள். எனது பாட்டி ஒருவருக்கு பதினாறு பிள்ளைகள். இன்னொரு பாட்டிக்கு பதினோரு பிள்ளைகள் என முன்பெல்லாம் பிள்ளைகள் இறை ஆசீரின் அடையாளமாக கருதப்பட்டார்கள். இப்போது காலம் மாறிவிட்டது. நாம் இருவர் நமக்கு இருவர் வந்தது. அதுவும் காலாவதியாகி நாம் இருவர் நமக்கு ஒருவர் என்றானது. இப்போது நாமே குழந்தை, நமக்கேன் குழந்தை எனும் வாசகங்களும் காணக் கிடைக்கின்றன.

குழந்தைகள் இல்லாத வீடு, தேவதைகள் இல்லாத சொர்க்கம். என்னதான் இலட்சம் ரூபாய்க்கு வண்ண விளக்கு வாங்கி வைத்தாலும் அதில் மின்சாரம் பாய்ந்தால் தான் அழகாய் ஒளிரும். மழலையில் குரல் ஒலிக்காத வீடுகள் ஏகாந்தத்தின் துயரம். அதனால் தான் நம் மூலமாய் குழந்தை பிறக்கவில்லையேல், தத்து எடுத்து தனதாக்கிக் கொள்ளும் அற்புதமான பெற்றோர்கள் நம்மிடையே இருக்கின்றனர்.

குழந்தைகளை வரவேற்பது ஒன்று, வளர்த்துவது இன்னொன்று. அது ஒரு கலை. முன்பெல்லாம் நிறைய குழந்தைகள் இருந்த வீடுகளில் மூத்த குழந்தைகளே இளைய குழந்தைகளை வளர்த்தின. மூத்த அக்கா, தங்கைகளுக்கும், தம்பிகளுக்கும் இன்னொரு அம்மாவாகிப் போனார்.

ஒரு குழந்தை மட்டும் வீட்டில் இருந்தால் அந்தக் குழந்தை தலைக்கனம் பிடித்ததாக, கர்வம் கொண்டதாக, தன்னலம் நிறைந்ததாக, சமூக பழக்கம் இல்லாததாக இருக்கும் என ஏகப்பட்ட புகார்கள் உண்டு.எல்லாமே பொய். ஒரு குழந்தை எப்படி இருக்கிறது என்பதும், எப்படி இருக்க வேண்டும் என்பதும் பெற்றோரின் கையில் தான் இருக்கிறது. உலகம் வியந்த ஐன்ஸ்டீன், ஐசக் நியூட்டன் ஏன் இந்திரா காந்தி கூட பெற்றோருக்கு ஒற்றைக் குழந்தை தான்.



பொதுவாக ஒரே ஒரு குழந்தை வீட்டில் இருந்தால் பெற்றோரின் முழு கவனிப்பும் அந்தக் குழந்தைக்குக் கிடைத்து விடுகிறது. எப்போதும் கொஞ்சிக் குலாவி, கேட்பதையெல்லாம் கொடுத்து, செல்லத்தின் உச்சியில் அவர்களை உட்கார வைத்து விடுகின்றனர். அது தவறு.

குழந்தைக்கு அனுமதியையும், மறுப்பையும் சரி விகிதத்தில் கொடுக்க வேண்டும். வெற்றியையும், தோல்வியையும் சின்ன வயதிலேயே பழக்க வேண்டும். அரவணைப்பையும், கண்டிப்பையும் மழலைப் பருவத்திலேயே அறிமுகப்படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் வாழ்க்கையின் இரண்டு பக்கங்களையும் பெற்றோரே அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

அது தவறும் போது தான் சிக்கல் ஆரம்பமாகிறது. குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும் போது நினைப்பதெல்லாம் கிடைப்பதில்லை. எல்லோரும் அரவணைப்பதில்லை. வெற்றிகள் மட்டுமே வசமாவதில்லை. அங்கே அவர்கள் வாழ்வின் எதார்த்தத்தை அச்சத்தோடு எதிர்கொள்ள வேண்டிய சூழல் வருகிறது. குழந்தைகளுக்கு பெற்றோரே அவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தால் அவை மிக எளி தாக அத்தகைய சூழல்களை எதிர் கொண்டு விடுகின்றன.

ஒரு சின்ன உதாரணமாக, வீட்டில் இரண்டு குழந்தைகள் இருந்தால் ஒரு விஷயத்துக்காக குழந்தை காத்திருக்க வேண்டிய சூழல் உருவாகும். அக்காக்கு இப்போ, உனக்கு அடுத்த மாசம். அல்லது, நீ எக்ஸாம் முடி உனக்கு வாங்கித் தரேன். என காத்திருப்பு சூழல்கள் இயல்பாகவே உருவாக்கப்படும். அது குழந்தையை பக்குவப்படுத்தும். ஒற்றைக் குழந்தையெனினும் காத்திருக்கும் குணாதிசயத்தைப் பெற்றோரே கற்றுக் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு ‘எமோஷனல் சூயிசைட்‘ அதிகம். காரணம் அளவுக்கு அதிகமாய் பிள்ளைகளைக் கொஞ்சி வளர்த்தும் பெற்றோர். அவர்களுக்கு தோல்வி என்ன என்பதை அறிமுகம் செய்து வைக்காத பெற்றோர். வாழ்க்கை மேடு பள்ளங்களின் கூட்டுத் தொகை என்பதைக் கற்றுக் கொடுக்காத பெற்றோர்.

இன்றைக்கு மண முறிவுகள் வெகு சகஜம். ஏன் ? வாழ்க்கையின்

17 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# வீட்டுக்கு ஒரே பிள்ளையா?

எதார்த்ததையும், நடைமுறை சிக்கல்களையும் அறிந்திராதவர்களே மணமகளாகவோ, மணமகனாகவோ வருகின்றனர். அவர்களுக்கு புதிய உறவும், பொறுப்புணர்ச்சியும் பதற்றத்தையும், மன அழுத்தத்தையும் தருகிறது.

சின்ன வயதிலேயே குழந்தைகளுக்குத் தேவையான சுதந்திரம் கொடுத்து, அவர்களை சுயமாய்ச் செயல்பட வைத்தால் குழந்தைகள் பக்குவமடைந்து விடுவார்கள். சின்ன வயதில் பெற்றோர் பிள்ளைகளுக்கு பொறுப்புகளைக் கொடுத்தால் அது அவர்களுக்குப் பழகி விடுகிறது.

'பொத்திப் பொத்தி வெச்சேன், இப்படி பண்ணிட்டாளே' என புலம்பும் பெற்றோர் புரிந்து கொள்வதில்லை, அவர்கள் செய்த தப்பே பொத்திப் பொத்தி வெச்சது தான் என்பதை. பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமான பாதுகாப்புக் கவசங்கள் போடுவது தவறு. ஒரே ஒரு குழந்தையெனில் இந்த சிக்கல் அதிகமாக வந்து விடுகிறது. அத்தகைய குழந்தைகள் திருமணத்தின் போது சட்டென அத்தனை கட்டுகளும் அவிழும் போது குழம்பி விடுகின்றனர்.

ஒற்றைக் குழந்தையாய் வளரும் குழந்தைகள் பெரும்பாலும் பேசிக் கொண்டே இருப்பார்கள். கேட்கும் திறன் குறைவாக இருக்கும். அதை பெற்றோர் கவனத்தில் கொண்டு அவர்களிடம் அந்த திறமையை வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும். குழந்தையுடன் அன்பாகவும், நேசத்தோடும் இருக்க வேண்டும். அதே நேரம், அவர்களுக்குத் தேவையான கண்டிப்பை வழங்கத் தவறவே கூடாது.

ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் வீட்டிலேயே பிள்ளைகள் பகிர்தல், மற்றும் இணைந்து வாழ்தலில் பழகி விடும். ஒரே குழந்தையெனில் அவற்றையெல்லாம் பெற்றோர் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அருகிலுள்ள குழந்தைகள், ஆலய குழுக்கள், சமூக குழுக்கள் போன்றவற்றில் இணைத்து விடலாம்.

கலைகளில் குழந்தையை நிச்சயம் சேர்த்து விடுங்கள். அதிலும் கிரிக்கெட், டென்னிஸ், டான்ஸ் போன்ற பலரோடு இணைந்து செய்யும் கலைகளில் ஈடுபடுத்துவது அதிக பயனளிக்கும். குழந்தையின் தனிமையை அது குறைக்கும். அது போல பெற்றோரும் அதிக நேரம் குழந்தையோடு செலவிட்டு தனிமையை இனிமையாக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் ஸ்மார்ட் போன், கணினி என டிஜிடலுக்குள் நுழைந்து நிஜ ஆனந்தத்தை இழந்து விடுவார்கள்.

"நீ எனக்கு ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு", "நீ தான் என் உலகம்" எனும்



அதீத மனநிலையையோ, "இன்னொரு குழந்தை எனக்கு இல்லாம போச்சே" எனும் இயலாமை மனநிலையையோ குழந்தையிடம் எந்தக் காரணம் கொண்டும் நுழைக்கவே நுழைக்காதீர்கள். அது அவர்களை மன கிளர்ச்சிக்கோ, மன இறுக்கத்துக்கோ இட்டுச் செல்லும். இரண்டுமே நல்லதல்ல.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், எந்த ஒரு செயலை உங்கள் குழந்தைக்காகச் செய்ய நினைத்தாலும் ஒரு கேள்வியைக் கேளுங்கள். "எனக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்திருந்தாலும் இந்த நிலையைத் தான் எடுத்திருப்பேனா ?

குழந்தைகள் குயவன் கை மண் போல. அதை எப்படி வனைவது என்பதை பெற்றோர் தான் முடிவு செய்ய வேண்டும். பெற்றோர் வனையத் தவறினால் யாராரோ வந்து தப்புத் தப்பாய் வனைந்து விடும் அபாயம் உண்டு.

எனவே ஒரு குழந்தையோ, பல குழந்தைகளோ, அவர்களை குழந்தைகளாய் வளரவிடுங்கள். தன்னம்பிக்கை, சமூக ஈடுபாடு, அன்பு, பகிர்தல், கீழ்ப்படிதல் போன்ற நல்ல குணாதிசயங்களோடு வளர்த்துங்கள். அவர்கள் நாளை வீட்டுக்கு ஆனந்தமும், நாட்டுக்கு பெருமையும் தேடித் தருவார்கள். ■

---

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உலகப் பொருளாதாரமே சீர்குலைந்தது!

★ தை - 2023 உக்ரைன் நாட்டுப்படைகளின் ஏவுகணைத்தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டனர்.

★ மாசி - 2023 அமெரிக்க ஜனாதிபதி திடீரென உக்ரையினுக்கு விஜயம் செய்தார். 50 கோடி டொலர் மதிப்புள்ள ஆயுத தளபாடங்களை உக்ரையினுக்கு வழங்குவதாக அறிவித்தார்.

பதிலடியாக உலக அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து ரஷ்யா விலகுவதாக ரஷ்ய ஜனாதிபதி அறிவித்தார்.

ஐரோப்பி யூனியன்நாடுகள் அமெரிக்கா இன்னும் சில நாடுகளின் பேருதவியால்தான் உக்ரைன் கடந்த ஒருவருடமாகத் தாக்குப்பிடித்தது என்று கூறப்படுகின்றது. இந்த நாடுகளின் ஆயுதம் பணம் படை பொருளாதார உதவிகள்தான் உக்ரைனுக்குப் பலத்தைச் சேர்த்துள்ளது. ரஷ்யா தனது அணு ஆயுத பலம் முழுவதையும் பாவித்தால் உலகமகா யுத்தமாக உருவெடுப்பதற்கும் காரணமாகிவிடலாம். இந்த நாடுகளுக்கு உக்ரைன்மீது அவ்வளவு பாசம் ஏன் என்ற கேள்வியும் உண்டு. ரஷ்யாவை அடக்கி கட்டுப்படுத்தி தமது பாதுகாப்பைப் பலப்படுத்திப் பாதுகாப்பதற்காகவே உக்ரையினை இந்த நாடுகள் பயன்படுத்துகின்றன என்ற பார்வையும் உண்டு.

தமது அயல்நாடுகளான போலந்து உக்ரைன் போன்ற நாடுகளில் தமது படைகளையும் அணு ஆயுத போர்க்கருவிகளையும் கொண்டு வந்து குவித்து தமது நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என ரஷ்யா அஞ்சியே போரை விடாமல் தொடர்கின்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான ஓராண்டுப் போரால் சுமார் 2 கோடி உக்ரையின் நாட்டு மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். உள்நாட்டில் பல லட்சம்பேர் அகதி முகாம்களில். சுகாதாரம் பெரும் பாதிப்பு பல்லாயிரம் குடியிருப்புகள் தரை மட்டம். ஆயிரக்கணக்கான பாடசாலைகளும் வைத்தியசாலைகளும் அழிந்துள்ளன. மொத்தமாக அனைத்துக் கட்டுமானங்களும் சீர்குலைந்து சீரழிந்தே காணப்படுகின்றன. சர்வதேசத்தின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக விலை ஏற்றம் தட்டுப்பாடு பாதுகாப்பு எரிசக்தி பொருளாதாரம் உள்ளிட்ட பல விடயங்களில் பல மாறுதல்களும் சுமைகளும் உலக மக்கள்மீது வந்து சேர்ந்துள்ளன. இந்தப் போர் தொடருமானால் இன்னும் பல விளைவுகளை உலகம் சந்திக்கும் என்பதே நிஜமாகும். ஆகவே மேற்குலக நாடுகள் நேட்டொ நாடுகள் அமெரிக்கா ரஷ்யா சீனா போன்ற நாடுகள் ஐக்கியநாடுகள் சபை என்பன விரைவாக ஒரு தீர்வை எட்ட வேண்டும். இதையே உலகப் பொதுமக்கள் இன்று எதிர்பார்க்கும் ஜதார்த்தமாகும்.

### இருதரப்பினரின் அழிவுகள்..

★படையினரின் இழப்பு –
1.60.000 படையினர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

| | |
|---|---|
| ★விமானங்கள் இழப்பு | - 304 |
| ★உலங்குவானூர்திகள் இழப்பு | - 304 |
| ★யுத்ததாங்கிகள் இழப்பு | - 281 |
| ★போர் விமானங்கள் இழப்பு | - 6.770 |
| ★ஆட்டிலறிகள் இழப்பு | - 2.500 |
| ★யுத்த தாங்கிகள் | - 5.342 |
| ★போர் கவச வாகனங்கள் | - 493 |
| ★போர்க்கப்பல்கள் | - 18 |
| ★ரோந்துப் படகுகள் | - 2.100 |
| ★இந்தப் போரால் ஓராண்டில் இறந்த பொதுமக்கள் | –சுமார் 25.000 பேர் |
| ★சிறுவர்கள் | –சுமார் 2.000 பேர் |
| ★காயமடைந்தவர்கள் | - சுமார் 30.000 பேர் |
| ★காயமடைந்த சிறுவர்கள் | - சுமார் 4.000 பேர் |

★இந்தப் போரால் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தோர் 1.97 கோடி உக்ரையின் மக்களாவர். மிக அதிகமானோர் பின்வரும் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

| | |
|---|---|
| ★போலந்தில் | - 97 லட்சம் பேர் |
| ★ரஷ்ஷியாவில் | - 28 லட்சம் பேர் |
| ★கங்கேரியில் | - 22 லட்சம் பேர் |
| ★ருமேனியாவில் | - 20 லட்சம் பேர் |
| ★ஸ்லாவாக்கியாவில் | - 12 லட்சம் பேர் |
| ★மல்டொவாவில் | - 8 லட்சம் பேர் |
| ★ஏனைய நாடுகளில் | - 5 லட்சம் பேர் |


## வெற்றிமணி திருமண சேவை



நன்கு படித்த, Master முடித்த யேர்மனியில் Bonn நகரில் வேலை செய்யும் 1993 ஆம் ஆண்டு பிறந்த சைவ வேளாளர் பெண்ணுக்கு (உயரம் 171 cm) சிறந்த மணமகன் தேவை Nordrhein-Westfalen மாநிலத்தில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
அமரன் 01731833664




மணமகன் தேவை!

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக்கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.
பெற்றோர் தொடர்பு கொள்ளவும்.
4915774318528

Wirtschaftsingenieur படித்த 34 வயதுடைய நற்குணமுடைய சைவ வேளாளர் பெண்ணுக்கு, பொருத்தமான பட்டதாரி மணமகன் தேவை.
பெற்றோர் தொடர்புகொள்ளவும்: 4915774318528


PALAZIO
EVENTLOCATION
உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களுக்கும்,
மேடை நிகழ்வுகளுக்கும் ஏற்ற,
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் ஓர் அழகிய மண்டபம்!
450 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய
வசதியுடனும் கூடியது!
மேலும் எம்மிடம்....
★ போட்டோ மற்றும் வீடியோ
PALAZIO_EVENTLOCATION
+ (49) 1525 3961138
PALAZIO EVENTLOCATION
Kasinostr. 25 | 42103 | Wuppertal | apollogastrogmbh@gmail.com



# ஒரு கண் ஒரு கோடி வண்ணங்கள்!

## (நம் உடல் ஒரு அதிசயம்!)



நம் உடல் உண்மையிலேயே ஒரு அற்புதமான எந்திரமாகும். அது பல்லாயிரம் கோடிக் கணக்கான உயிரணுக்களால் ஆனது. நமது எலும்புகள் மற்றும் தசைகள் முதல் நமது உறுப்புகள் மற்றும் திசுக்கள் வரை, நமது உடலின் ஒவ்வொரு பகுதியும் நம்மைச் சிறப்பாக செயல்பட வைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தக் கட்டுரையில் நம் உடலைப் பற்றி நீங்கள் இன்று வரை அறிந்திராத சில ஆச்சரியமான உண்மைகளைப் பற்றி அறியத்தருகிறேன் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

### மூளையில் உள்ள பால்வெளி மண்டலம்

இந்த வரிசையில் முதல் இடத்தைப் பெறுவது நமது மூளை ஆகும். மனித மூளை ஒரு நம்ப முடியாத சிக்கலான உறுப்பு ஆகும், இதில் கோடிக்கணக்கான நரம்பணுக்கள் (neurons) உள்ளன. இந்த நரம்பணுக்கள் நரம்பிணைப்புக்களால் (synapses) இணைக்கப்பட்டுள்ளன. ஆச்சரியப்படும் விதமாக, பால்வெளி மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை விட மனித மூளையில் உள்ள நரம்பிணைப்புக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது!

### உடலில் மிகப்பெரிய உறுப்பு

பெரும்பாலான மக்கள் தங்கள் தோலை ஒரு உறுப்பு என்று கருதுவதில்லை. தோல் சும்மா தோல் தான் என்று நினைப்பர். ஆனால் உண்மையில் நமது தோல் தான் மனித உடலில் மிகப்பெரிய உறுப்பு என்று சொன்னால் நம்புவீர்களா? இது தோராயமாக 1,9 சதுர மீட்டர் பரப்பளவையும் மற்றும் சுமார் 2,7 கிலோ கிராம் எடையும் கொண்டதாகும். வெளி உலகத்திலிருந்து நமது உடலைப் பாதுகாப்பது அதன் முதன்மைப் பணியாகும், ஆனால் இது நமது உடல் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தவும், தொடுதல், அழுத்தம் மற்றும் வெப்பநிலையை உணரவும் உதவுகிறது.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

### எலும்பு உருக்கை விட வலிமையானதா?





நம்பினாலும் நம்பாவிட்டாலும் நம் எலும்புகள் உருக்கை (steel) விட வலிமையானதாகும். நம் எலும்புகள் ஆச்சரியமூட்டும் அளவிற்கு அழுத்தம் தாங்கக் கூடிய தன்மையைக் கொண்டன. இதைச் சற்று புரியும்படி சொல்லவேண்டும் என்றால் இதைப் பாருங்கள். ஒரு துண்டு மரக்கட்டையை எடுத்து அதன் மேல் 224 கிலோ கிராம் அழுத்தத்தைச் செலுத்தினால் அது முறியும். அதே அளவில் உள்ள ஒரு உருக்குக் குழாயை முறிக்க வேண்டுமென்றால் சுமார் 255 கிலோ கிராம் அழுத்தத்தைச் செலுத்தவேண்டும். ஆனால், இதை ஒப்பிடக்கூடிய தடிமன் கொண்ட எலும்பொன்றை உடைக்க வேண்டும் என்றால் 624 கிலோ கிராம் அழுத்தத்தைச் செலுத்தினால் மட்டுமே அதனை முறிக்க முடியும். இது ஆச்சரியமாக இல்லையா?

### 100.000 தடவை லப் டப் லப் டப்

இதயம் நம் உடலில் உள்ள மிக முக்கியமான உறுப்புகளில் ஒன்றாகும். இது இரத்தத்தை செலுத்துவதற்கும் பிராணவாயு மற்றும் ஊட்டச்சத்துக்களை நமது உயிரணுக்களுக்கு வழங்குவதற்கும் பொறுப்பாகும். சராசரியாக ஒரு நாளில், மனித இதயம் 100,000 தடவைகளுக்கு மேல் துடிக்கிறது. சுமார் 7.570 லிட்டர் இரத்தத்தை நம் உடலில் செலுத்துகிறது.

### நுரையீரலில் விளையாடும் டென்னிஸ்

நமது உடலுக்குள் பிராணவாயு கொண்டு வருவதற்கும் கரியமிலவாயுவை அகற்றுவதற்கும் நமது நுரையீரல் பொறுப்பு. என்னதான் நம் நுரையீரல் பார்க்கச் சிறிதாக இருந்தாலும், அது நம்பமுடியாத அளவிற்கு வேலைகளைச் செய்துவருகிறது. ஒரு நாளைக்கு சுமார் 7,600 லிட்டர் காற்றைச் செயலாக்கும் திறன் கொண்டதாகும். இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால், நம் நுரையீரலை எடுத்து இழுத்து விரித்தால் அதன் பரப்பளவு ஒரு டென்னிஸ் மைதானத்தின் அளவாக இருக்கும்!

### ஒரு கண் ஒரு கோடி வண்ணங்கள்

நம் கண்கள் நம்பமுடியாத அளவுக்கு உணர்திறன் கொண்ட ஒரு உறுப்பாகும். குறிப்பாக ஒளி மற்றும் நிறத்தில் உள்ள சிறிய மாறுபாடுகளைக் கூட கண்டறியும் சக்தியைக் கொண்டதாகும். உண்மையில், நம் கண்கள் 1 கோடி வெவ்வேறு வண்ணங்களை வேறுபடுத்தி காணுமாம். இது ஆச்சரியமாக இல்லையா?

எங்கள் உடல் உண்மையிலேயே அற்புதமான எந்திரம் தான். நம்பமுடியாத சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை நமக்குத் தெரியாமலே செய்து வருகிறது. என்ன நண்பர்களே நமது உடலின் இந்த அதிசய விஷயங்களை நீங்கள் முன்பே அறிந்தீர்களா?

## வெற்றிமணி சித்திரை மாத அட்டைப்படங்கள்

### வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது



பறவைகள்: எம்.லோகி
(கானுயிர் புகைப்பட கலைஞன்)
யேர்மனி



புதுமணத் தம்பதிகள்:
அனோஜிதன் - தர்ஷாஹினி
(Foto: Cine Magic Creations Jaffna )

அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்தற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# கொண்டாட்டங்கள் மனிதர்களைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவுகின்றது




சித்திரை மாதத்தில் தமிழர்க ளும் சிங்களவர்களும் சித்திரைப் புத்தாண்டு கொண்டாடுகின்றார்கள். இம்மாதத்தின் முதல்நாள் முட்டாள்கள் தினமும் கொண்டாடப்படுகின்றது. இங்கு ஏமாற்றத்துடன் ஆரம்பிக்கப்படும் இம்மாதம் கேலியையும், கிண்டலையும் ஏமாற்றத்தை யும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

ஆனால்,புதுவருடம் என்று தமிழர்கள் கொண்டாடுகின்ற இவ்வருடப்பிறப்பு தனியே கொண்டாட்டத்திற்கு மட்டுமே உரிய நாளாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களு க்கு வட்சப்பிலும் முகநூலிலும் வாழ்த்துச் சொல்லும் நாளாக மட்டுமே காணப்படுகி ன்றது. இது ஒருபுறம் இருக்க இப்போது திருவள்ளுவர் ஆண்டுதான் தமிழர்கள் ஆண்டு என்று சொல்லப்பட்டுத் தமிழர்கள் ஏற்று நடக்கின்றனர். கிரிகோரியன் ஆண்டு 2023 ஆம் ஆண்டை 2054 என்கி றது. அதேபோல் எம்முடைய வள்ளுவர் ஆண்டும் 31 வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கின்றது.

தமிழ் பஞ்சாங்கத்தின்படி தை 14 ஐத் தமிழர்கள் தை 1 என்கின்றார்கள். இது என்ன இடியப்பச் சிக்கல். யார் என்ன சொன்னா லும் தைமாதம் முதலாம் திகதி வெடிக் கொழுத்தி, வானவேடிக்கைகள் காட்டி, வைன் போத்தலை உடைத்துக் கையிலே வைன் கிளாஸை வைத்துக் கொண்டு ஹெப்பி நியூ இயர் சொல்லுகின்றவர்க ளும் தமிழர்கள்தான். தைப்பொங்கல் புதுவருடம் என்று கொண்டாடுபவர்களும் தமிழர்கள்தான். சித்திரைப் புத்தாண்டை வழுக்கு மரம் ஏறிக் கொண்டாடுபவர்களும் தமிழர்கள் தான்.

**சங்க இலக்கியங்களிலுள்ள**
**நெடுநெல்வாடையில் நக்கீரர்**
**திண் நிலை மருப்பின் ஆடு தலை ஆக,**
**விண் ஊர்பு திரிதரும் வீங்கு**
**செலல் மண்டிலத்து**

என்று பாடியுள்ளார். திண்ணிய நிலை யினையுடைய கொம்பினையுடைய மேஷ ராசி தொடங்கி மற்ற ராசிகளில் சென்று திரியும் சூரியன் என்று எழுதப்பட்டுள்ளது. பண்டைய தமிழர்கள் மேஷ ராசியையே முதல் ராசியாக கருதினர். எனவே மேஷ ராசியில் சூரியன் திரியும் மாதம் சித் திரை, ஆகவே அதுவே சங்ககால மக்க ளின் முதல் மாதமாகச் சொல்லப்பட்டது. “சித்தர்களின் ஜோதிட வருஷாதி என்ற நூலிலும் சித்திரைதான் முதல் மாதம் என்று



சொல்லப்பட்டிருக்கின்றது. மலை படுகடாம் என்னும் நூலில் “தலைநாள் பூத்த தலை நாள் பூத்த பொன் இணர் வேங்கை“ எனவும், சிறுபாணாற்றுப்படையில “தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்“ என இளவே னில் காலங்களில் மலரும் செருந்தி மலரை பற்றியும், குறிப்பிட்டுள்ளார்.

**சித்திரை மாதத்தில் புத்தாண்டு தமிழ்த்**
**தெய்வம் திகழும் திருநாட்டில்,**
**இத்தினம் அந்தத் திருநாள் ஆதலின்**
**ஈசனைப் போற்றி வரம்கேட்போம்.**

என நாமக்கல் கவிஞரும் சித்திரையில் புத்தாண்டு என்று பாடியுள்ளார்கள். இவ்வாறு இலக்கிய மாந்தரால் சித்திரையில் புத்தாண்டு கொண்டாடப்பட்டுள்ளதை இலக்கியங்களின் மூலம் நிரூபணமாகி யுள்ளது.

1912 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தால் பதிப்பிக்கப்பட்ட தமிழ்ப் பேரகரா தியிலும் சித்திரை முதல்நாள் புத்தாண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்திலே இந்த ஏப்ரல் முதலாம் திகதி வித்தியாசமான ஆடைகளை அணி ந்து தாந்தோன்றித் தனமாகத் திரிவார் களாம். ஒவ்வொருவரும் மற்றவர்களை ஒரு பொய்யை மெய் என்று நம்ப வைத்து கேலிக்கைகளைச் செய்து மகிழ்வார்களாம். ஜெர்மனியில் மாசி மாதத்திலே கார்னிவல் கொண்டாட்டம் நடத்தப்படும். அதில் விதம் விதமான ஆடைகள் அணிந்து தம்மைத் தாமே ஏமாற்றி மனிதனை மிருகமாகவும் பேயாகவும், பைத்தியமாகவும் இப்படிப் பலவகையில் பாவனை பண்ணி ஆடைகள் அணிந்து கொண்டாடுவார்கள். மனிதன் புதிதுபுதிதாகத் தன்னை மாற்றிப் பார்ப்ப தில் விருப்புடையவன். இதில் வரலாற்று ஆசிரியர்களும் தம்முடைய உழைப்பைப் போடுகின்றார்கள். அவர்கள் ஆட்டி வைக் கும் பொம்மைகளாய் மனிதர்கள் ஆடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அன்றைய ரோமானியர்களும் சித் திரை முதலாம் திகதியை புத்தாண்டு தின மாக பரிசுப் பொருள்கள் கொடுத்து மகிழ் ச்சியாகக் கொண்டாடியிருக்கின்றார்கள். ஐரோப்பாவிலும் 16 ஆம் நூற்றாண்டு வரை ஏப்ரல் முதலாம் நாள்தான் புத்தா ண்டாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அதன் பின்தான் ஜனவரி முதலாம் நாள் புத்தா ண்டு தினமாக, மாற்றப்பட்டது. தொடர்ந்து சித்திரையை புத்தாண்டு தினமாகக் கொண் டாடுபவர்களை முட்டாள்கள் என்று கூறி முட்டாள்கள் தினம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரான்சிலே ஏப்ரல் மீன்கள் என்று கேலி செய்பவர்களைக் காணலாம். மீன் வடிவத்தை காகிதத்தில் வெட்டி தம்முடைய நண்பர்களின் முதுகிலே ஒட்டி விடுவார்கள். இவர்களைக் காண்பவர்கள் ஏப்ரல் மீன்கள் என்று கேலி பண்ணுவார்கள். இவ்வாறு ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தின மாகக் கொண்டாடப்பட்டது.

எந்த நாளாக இருந்தாலும் கொண் டாட்டங்கள் மனிதர்களைப் புத்துணர்ச்சி யுடன் வைத்திருக்க உதவுகின்றது. நாம் சித் திரை 14 ஆம் திகதி, தை முதலாம் திகதி, தை 14 ஆம் திகதி என்று மூன்று தினங் களையும் புதுவருடம் என்று கொண் டாடு வோம். பூமியே சுற்றும் திசையை மாற்றப் போகிறதாம். சூரியனும் பூமியை விட்டு தூரம் போகிறதாம். எல்லாம் தலை கீழாகும் போது இருக்கும் வரை கொண் டாட்டங்கள்தான் மிஞ்சப் போகிறது. அனுபவிப்போம்.







அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# விண்ணின் மைந்தன் மண்ணில் பிறந்தார்

"தேவன் தம்முடைய
ஒரேபேறான குமாரனை
விசுவாசிக்கிற எவனோ
அவன் கெட்டுப்போகாமல்
நித்திய ஜீவனை அடையும்படிக்கு,
அவரை தந்தருளி,
இவ்வளவாய் உலகத்தில்
அன்புகூர்ந்தார்"
(யோவான் 3:16)

விண்ணின் மைந்தன்
மண்ணில் பிறந்தார்
நம் பாவங்கள் சாபங்கள்
கழுவி சுத்திகரிக்க
பரிசுத்த ஆவியினால் மாமிசத்தோடும்
இரத்தத்தோடும் புவியில் வந்து உதித்தார்
வையகத்தில் வாழ் நாட்கள் எல்லாம்
நல்வழி போதித்த நல்மேய்பர்
வருத்தப்பட்டு பாரம் சுமந்தோர்க்கு
இளைப்பாறுதல் கொடுத்த
பரம வைத்தியர்
தேடி வந்தோர்க்கு அன்பினால்
அற்புதங்கள்
அதிசயங்கள் செய்த
கருணையின் இயேசு

நம் பாவங்கள் சாபங்களுக்காக கொடூரர்
கொடுமைப் படுத்திய போது இவர்களை
மன்னியும் என்ற மன்னிப்பின் தேவன்
அன்று கள்ளனையும்
மன்னித்து பரதீசில் சேர்த்தவர்
கொடூரமானவர்களின் கொடுமைக்
காட்சியைக்
கண்ட தாயின் உள்ளம் வெந்து, நொந்து
அழுதபோது ஆறுதல் அழித்த
அன்பு ஜீவ ஊற்று
வேதனை தாங்க முடியாமல்
ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி
என் தேவனே, என் தேவனே
ஏன் என்னைக் கைவிட்டீர் கதறி
தாகமாயிருக்கிறேன்
முடிந்தது என்று சொல்லி, ஆவியை
ஒப்புக்கொடுத்தவரே
மறுபடியும் மகா சத்தமாய் கூப்பிட்டு
ஆவியை விட்டார்.

திரைச்சீலை கிழிந்து பூமி அதிர்ந்து
கன்மலைகளும் பிளந்தன
கல்லறைகளும் திறந்தன
அடக்கம் பண்ணப்பட்டார்
மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார்.
ஐந்நூறு பேருக்கு அதிகமான
சகோதரருக்கு ஓரே
வேளையில் தரிசனமானர்
அவர் மீண்டும் பரிசுத்தவான்களை
அழைத்து
செல்ல வருவார். இயேசு கிறிஸ்துவே
உம்மை வாழ்த்துகின்றோம்,
போற்றுகின்றோம், வணங்குகின்றோம்

*"வேதவாக்கியங்களை
ஆராய்ந்து பாருங்கள்."*
(யோவான் 5:39)

**கு.வாமினி (ஜெர்மனி)**

# நாயிற் கடையாய்...



நாயொன்றைக்
காணவில்லையென்று
நான்கு நாட்களின்முன்
நாளிதழ் ஒன்றில்
விளம்பரம் வந்திருந்தது

நான் அதனைப்
பெரிது படுத்தவில்லை
நாய்தானே என்று
நினைத்தேனோ
என்னவோ...

காவல்துறையிலும்
முறைப்பாடொன்றை
கொடுத்திருந்தார்கள்
போலும்
காவல்நிலையப்
பொறுப்பதிகாரி
விசாரணையை
முடுக்கிவிட்டிருந்தார்
நாய்ச் சொந்தக்காரர்களுக்கு
அவர்
நாட்பட்ட பழக்கமோ
என்னவோ....

அக்கம் பக்கத்து
வீடுகளை விசாரித்தும்
வழிநெடுகிலுமுள்ள
சீ.சீ.ரீ.வி கமராக்களை
துருவித் துருவி ஆராய்ந்தும்,
நாயைக்கண்டுபிடிப்பதற்கு
மோப்பநாயைக்
கொண்டுவந்தும்...
நான்கு நாட்களில்
காணாமல்போன நாயை
கண்டுபிடித்து விட்டார்கள்.

அதற்கும்
அந்த நாளிதழில்
நன்றி தெரிவித்து
நாய்ச்சொந்தக்காரர்
விளம்பரித்திருந்தார்.

யாரோ பிடித்துக்
கொண்டுபோன
நாயை
நான்கு நாட்களுக்குள்
மீட்டுவிட்டார்கள்

நாங்களே ஒப்படைத்த
எங்கள் அண்ணா
"காணாமல் போய்"
பதின்நான்கு வருடங்கள்.

**வடிவேலு வடிவேலழகையன்**
**(காரைநகர்)**











# ஆனையிறவில் ஆடும் சிவன்

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே,கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை நிறு வப்பட்டிருக்கிறது.கரைசிப் பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயரமான அந்தச் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத்தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.

2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக் கிறது. தமிழ் மக்களின் பண்பாட்டு தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு யுத்த வெற்றி வளாகங்களைக் கடந்துதான் உள்ளேவர வேண்டும்.அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள்.இது எங்களால் வெற்றி கொள்ளப்பட்ட நிலம் என்று பொருள்.

யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பொழுது குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் முதலில் தென்படுவது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோல்வியுற்ற படை நடவடிக்கை ஒன்றின்போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனம். அதற்கருகில் அந்தக் கவச வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னம்.அதோடு சேர்த்து ஒரு விருந்தகம்.அதைச் சற்றுத் தாண்டிச் சென்றால்

**நிலாந்தன் (இலங்கை)**

வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரம்மாண்டமான ஒரு யுத்த வெற்றிச்சின்னம் உண்டு.இலங்கைத்தீவை இரண்டு கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த யுத்த வெற்றிச் சின்னந்தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாட்களை வரவேற்கின்றது. அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள்.

இவ்வாறு கடலேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் யுத்த வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில்,தமிழ் மக்களின் வழிபாட்டுருக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறுவியமை என்பது அரசியல் அர்த்தத்தில் கவனிக்கப்பட வேண்டியது.

அச்சிலையின் அழகியல் அம்சங்களைக் குறித்தும் அது பார்த்த உடனேயே கையெடுத்துக் கும்பிடக்கூடிய ஒரு சிலையாக இருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்தும் பின்னர் தனியாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறேன்.இன்று இக்கட்டுரையில் நான் கூறவருவது அச் சிலைக்குப் பின்னால் இருக்கும் பிரதேச,பிராந்திய மற்றும் கட்சி அரசியலைப் பற்றி.

நாவற்குழிச் சந்தியை போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம்.அரசாங்கம் அதைத் திட்டமிட்டு யுத்தவெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறது.தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேச சபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை



கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில்,சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல,ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய

பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு. ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்?அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல்வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா?

சிவபூமி அறக்கட்டளை ஒரு சமய நிறுவனம். அது தான் போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தும்.ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை.மேலும் பொதுவெளிச் சிற்பம் வேறு,மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் வேறு.இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்கும் பொதுப்புத்தியை அரசியல்வாதிகள் இலகுவாகக் கையாள்வார்கள்.

பிரயோக தேசியவாதமும் நடைமுறையில் பொதுப்புத்தியின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால்,தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று மேற்கத்திய அறிஞர்கள் கூறுவார்கள்.அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்டவேண்டும்.இதை இன்னும் ஆழமாக சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்ட வேண்டும்.இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம் ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம் யாரும் பிரதேச ரீதியாகவோ சாதி ரீதியாகவோ மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல் கீழானவரும் அல்ல என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும்.எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட வேண்டும்.மத மேலாண்மையின் மீது அல்ல.இந்த அடிப்படையில் சிந்தித்து தமிழ் மக்கள்தமது மரபுரிமைச்சின்னங்களைபாதுகாக்கவும் முன்நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச்சின்னங்களை முன்னிறுத்துவதில் தவறில்லை. அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால் ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும்போது அல்லது

24 ஆம் பக்கம் பார்க்க...






# ஆனையிறவில் ஆடும் சிவன்



அந்த மதச்சின்னங்களை அழிக்கும்போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது.அதாவது மதப்பல்வகைமை வேறு மத மேலாண்மை வேறு.

அண்மை ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாக பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது.இதில் சில தமிழ் அரசியல்வாதிகளும் அடங்குவர்.இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன்மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன.பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று.எனவே ஈழத் தமிழர்கள் அந்த அரசாங்கத்தைத் தான் அணுக வேண்டும்.ஆனால் அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

இப்பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது.இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தரமுடியாது.இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும்.ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப்பல்வமையை பலியிட வேண்டும் என்பதல்ல.

ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப்பல்வகமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.பெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது(1924) ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய கன்டி பேரின்பநாயகந்தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் கால்கோல் விழா 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் சீலஸ்ரீ துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது. இதுதொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம்.அக்கட்சியின் தலைவராகிய



செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்.செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள். தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு, தகனம் செய்யப்பட்டது.தன்னைத் தலைவராக தெரிந்தெடுத்து,தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு கேட்டுக் கொண்டதாக கருதப்படுகிறது.

எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது.அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக் கூடாது.குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுக நாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக் கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான். ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக,மோதலாக மாறவில்லை.

ஆனால்,2009க்குப் பின் எந்த ஒரு மதத் தலைவரும் துணிந்து கதையாத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த, முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறை மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது தமிழ்த் தேசியத் திரட்சிக்குப் பாதகமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல்வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு அகமுரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடத்தில்,இன்னொரு புறம்,சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் “எல்லைக் கற்களாக“ புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் ராணுவ அரசியற் சூழலில்,தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில்,ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சிவ நடனத்துக்கு ஆன்மீக வியாக்கியானம் மட்டுமல்ல,பௌதீகவியல் வியாக்கியானமும் உண்டு. அது ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது (cos mic dance) .ஆனையிறவுச் சிவனுக்கு மேலதிகமாக ஓர் அரசியல் பரிமாணமும் உண்டு. உப்புக் காற்றில் யுத்த வெற்றிச் சின்னங்களின் மத்தியில், சிவனார் யாருடைய பஜனைக்கு ஆடப்போகிறார்?

**nillanthan.com**




அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# மன்னாரில் பறவைகளின் சோகம்!



# தேடி வரும் பூநாரைகளின் காலை வாரி விடாதீர்கள்!

என்னுடைய பெயர் லோகேஸ் வரநாதன். நான் ஒரு வனவிலங்கு புகைப்பட கலைஞன். எனக்கு மிருங்கள், பறவைகளை புகைப்படம் எடுப்பதில் ஒரு அதீத நாட்டம்.

மன்னர் பகுதியில் முதல் முதலாக பிளமிங்கோ பறவைகளின் வருகை தந்துள்ளன என வலைத்தளம் மூலம் அறிந்து கொண்டேன். அதை முதலில் என்னுடைய கமராவின் மூலம் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆவலுடன் இந்தவருடம் (2023) ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜேர்மனி இருந்து என்னுடைய பயணத்தை மன்னார் நோக்கி தொடங்கினேன்.



எம்.லோகி
(கானுயிர் புகைப்பட கலைஞன்) யேர்மனி

சுமார் நான்கு ஐந்து நாட்கள் மன்னாரில் தங்கியிருந்து இருந்து இந்த அருமையான புகைப்படங்கள் எடுக்க அரிய வாய்ப்பு கிட்டியது.

## பிளமிங்கோ பறவைகள்

ஆஸ்திரேலிய கடல்பகுதியில் இந்த பறவைகள் அதிகமாகவே உள்ளது. அதுபோல் இந்தியாவில் குஜராத் மாநிலம் கட்ச் வளைகுடா கடல் பகுதியில் அதிகமான பிளமிங்கோ பறவைகள் உள்ளன. இலங்கை கரையோரத்தில் உள்ள யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் கிளிநொச்சி கலப்பு பகுதியிலும் பிளமிங்கோ பறவைகளை காணலாம்.

இந்த பறவைகள் உருவ அளவு 125 முதல் 145 சென்டி மீற்றர் வரை இருக்கும். இளஞ்சிவப்பு கால்களையும், நீண்ட கழுத்தையும் உடைய நீர் பறவை. உடல் வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால் இறக்கைகளை மடக்கி வைத்திருக்கும் போது அதில் உள்ள சிவப்பு நிற சிறகுகளான திட்டு தெரியும்.

ஆண்டுதோறும் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதங்களில் பூநாரை என்று சொல்லக் கூடிய பிளமிங்கோ பறவைகள் வருவது வழக்கம். இவ்வாறு வரும் பறவைகள் மன்னார் கலப்பு மற்றும் கடல் பகுதியில் குவிந்துள்ளன. இதனை சுற்றுலா பயணிகள் மற்றும் வனவிலங்கு புகைப்பட கலைஞர்கள் கண்டு ரசித்து



செல்கின்றனர். இவ்வாறு வரும் பறவைகள் ஏப்ரல் அல்லது ஜூன் மாதம் மீண்டும் திரும்பி செல்லும்.

மன்னார் சென்ற முதல் நாள் பிளமிங்கோ பறவைகளை சுமார் 800 மீற்றர் தூரத்தில் என் பார்வையில் பட்டன. பார்வையில் பட்டவற்றை என் கமராவின் ஊடாக புகைப்படம் எடுக்க வேண்டு என்ற நோக்கத்தில் நான் சுமார் 400 மீற்றர் தூரம் தவண்டு சென்று சில புகைடங்களை எடுத்தேன்.

இந்த வருடம் சுமார் ஆயிரத்துக்கு மேட்பட்ட பிளமிங்கோ பறவைகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளன. அதில் ஐந் துக்கு மேட்பட்ட பறவைகள் கால் இழந்த நிலையில் காணக்கூடியதாக இருந்தது. அதை பார்க்கும் போது கவலை அடைந்தேன். இவ்வாறு காணப்படும் பறவைகளை ஆவணப்படுத்த வேண்டும் என்று நோக்குடன் என்னுடைய கமராவை ஐந்து பிளமிங்கோ பறவைகள் பக்கம் திருப்பி புகைப்படங்களை எடுக்க ஆரம்பித்தேன்.

26 ஆம் பக்கம் பார்க்க...


லூர்ட்ஸ் மாதா புனிதப்பயணம் 2023



April, July, August மாதங்களில்

எமது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க
பஸ் மூலம் செல்ல ஒழுங்கு செய்து உள்ளோம்.
எமது சேவையின் சிறப்பை முன்னர்
பயணித்வர்கள் நன்கு அறிவர்.
பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு:
முருகா K.Muruga Handy: (49) 0175 850 1489





# யேர்மனியில் தமிழர் அரங்கத்தில் சர்வதேசப் பெண்கள் தினம்



யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் தமிழர் அரங்கத்தில் கடந்த பங்குனி 08 ம் திகதி சர்வதேசப் பெண்கள் தினம் மிகச்சிறப்பாகக் இடம்பெற்றது. இவ் விழாவினை தமிழர் அரங்கம் ஒழுங்கு செய்து இருந்தது. வரவேற்புரை கலைநிதி சபேசன் நிகழ்த்தினார்.

இவ்வருடம் சர்வதேச பெண்கள் தினத்தில் முன்னெடுக்கப்படும் தீர்மானம் 'சமத்துவத்தை அணைப்போம்' என்பதாகும். நாமும் அதற்கான முன் எடுப்புகளை வீட்டில் மட்டுமன்றி, அதற்கு வெளியிலும், தொழில்புரியும் இடங்களிலும் எடுப்போம் என உறுதிபூண்டோம். உண்மையில் இன்றும் என்ன என்ன வடிவங்களில் பெண்கள் அடிமைப்படுத்தப் படுகின்றார்கள் என உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர். தன் காலில் பெண்கள் நிற்க, கல்வி, தொழில், இவற்றுடன் சுதந்திரம் முக்கியம். இதனை ஆண்களிடம் பெறுவது என்று அல்ல அதன் பொருள். அந்த சுதந்திரத்திற்கு ஏற்றவர்களாக நம்மை நாமே உருவாக்க வேண்டும் என்பதேயாகும்.

அத்துடன் பெண்களின் அறிவினை, அறியாமையை, எடுத்துக் கூறும் திரையிசைப் பாடல்கள் வேறு. தனித்து பெண்களின் உடலை வர்ணிப்பது, அதன் மூலம் சொல்ல வரும் செய்திகள் வேறு. உதாரணமாக ஜீன்ஸ் படத்தில் வரும்



**அன்பே அன்பே கொல்லாதே**
**கண்ணே கண்ணை கிள்ளாதே**
**பெண்ணே உனது மெல்லிடை பார்த்தேன்**
**அடடா பிரம்மன் கஞ்சனடி**
**சற்றே நிமிர்ந்தேன் தலைசுற்றிப் போனேன்**
**ஆஹா அவனே வள்ளலடி**

இப்ப பாடலை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் ஆய்வுக்கு உள்ளாக்கினர். அதன் பின்னர் ஞாபகசக்தி வலுப்பட அதற்கேற்ப பாடல் போட்டிகள் இடம் பெற்றன. நெடுந்தீவு முகிலன் வழங்கிய சீதனம் பற்றியதொரு குறும்படம் திரையிடப்பட்டது. சிற்றுண்டி, விளையாட்டுகள், என பெண்கள் பம்பலாக பொழுதுகளைக் கழித்தனர். இந்த பம்பல் என்ற சொல் பங்குபற்றிய இளம் பெண்களிடம் இருந்து வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. பெண்கள் தினம் என்று பெண்கள் மட்டும் அன்றி ஆண்களும் கலந்து சிறப்பித்தனர்.

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மன்னாரில் பறவைகளின் சோகம்!

ரெயில் பெட்டி போன்று நீண்ட நெடிய வரிசையில் கலப்புக்குள் நின்ற படி இரை தேடியபடி சுற்றுகின்றன. வனவிலங்கு புகைப்பட கலைஞசர்களுக்கு கமராக்கு விருந்தாக இந்த பறவைகள் காணக்கூடியதாக உள்ளது.

### பிளமிங்கோ பறவைகள் இரைதேடுவதே அழகு

இரைதேடும் பண்பு மிகவும் வித்தியாசமானது. தலையை குப்புற கவிழ்ந்து முழுவதும் நீருக்குள் விட்டு அல்லது அலகை மட்டும் நீரின் மேற்பரப்பில் அழுத்தி இரை தேடும். மற்ற பறவைகளுக்கு உள்ளது போல இல்லாமல் இவற்றின் மேல் அலகு வெகுவாக அசையும் பண்பை பெற்றிருக்கும்.



கடல் நீரில் உள்ள சிறிய இறால் வகை உயிரினங்கள், புழு பூச்சிகள், நீர் தாவரங்களின் விதைகள் உள்ளிட்டவைகளை உணவாக உட்கொள்ளும். கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு பிளமிங்கோ பறவைகள் குறைவாகவே வந்துள்ளது. இன்னும் சில நாட்களில் அதிகளுவு வருவதற்கு வாய்ப்புள்ளது.

இந்த வருடம் மட்டும் கால்கள் இழந்த பறவைகளை காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறான பறவைகள் நிலைக்கு மனிதர்களின் செயல்பாடுகள் காரணமாக இருக்கலாம். சரியாக என்னால் இதனைக் கூற முடியவில்லை இருந்தும் காலநிலை மாற்றம் அல்லது மனிதர்கள் மீன் பிடிக்க விரிந்திருக்கும் வலைகளில் இதன் கால்கள் சிக்குண்டு இவ்வாறு நடைபெற்றிருக்கலாம்.

இந்த வருடம் பிளமிங்கோ பறவைகளை பார் வையிட வந்த சுற்றுள்ள பயணிகளால் அதிகளவில் இடையூறுகளை காணப்பட்டன. அவர்கள் அணிந் திருக்கும் ஆடைகள் மற்றும் பிளமிங்கோ அருகில் புகைப்படம் எடுக்க அவர்கள் செல்வதனால் பிளமிங்கோ பறவைகள் இடையூறு களை எதிர்நோக்கின. இதனால் அந்த பறவை வேறு இடங்களைத் இரை தேடி சென்றன. இந்த நிலை இவ்வாறு நீடித்தால் இனி வரும் காலங்களில் இவ்வாறான வெளிநாடு பறவைகள் வருவது குறைவடை வாய்ப்புள்ளது.


GASTSTÄTTE WICKE
BEHAGLICH - FAMILIÄR
OUR SERVICES
-Decoration
-Videography
-Photography
-Icing cake
-DJ
-LED écran

உங்கள் வைபவங்கள் சிறக்க எமது சேவைகள்!
Decoration, Party service, makeup
அனைத்து விதமான கொண்டாட்டங்களுக்கும்
மண்டப அலங்காரங்களுக்கும் (Decoration) நாடுங்கள்.



Party Service
உங்கள் வைபவங்கள் சிறக்க இலங்கை இந்திய
ஜேர்மன் உணவுகள் கேக் வகைகள் செய்து தரப்படும்.
தொடர்புக்கு: 0049 172 7022 517

இவற்றுடன் தரமான மேக்கப் கமரா சேவைகளும் உண்டு.



சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்



# 'பெண்களும் தேச வழமையும்'

**யாழ்ப்பாணத்தின் 80% சொத்துக்கள் பெண்கள் கையிலேயே உள்ளன!**

தேசவழமைச் சட்டம் என்பது ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வழங்கிய வழக்கங்களை (customs) அடிப்படையாக வைத்து யாழ்ப்பாண முதலிமாரின் உதவியுடன் ஒல்லாந்தரால் தொகுக்கப்பட்ட ஒரு சட்டம் ஆகும்.

* 1707 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் எழுத்து மூலமாக்கப்பட்டது.
* 1806 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் சட்ட மூலமாக்கப்பட்டது.
* 1869 இலும் பின் 1911 இலும் கடைசியாக 1948 இலும் இச்சட்டமானது திருத்தியமைக்கப்பட்டது.

இச்சட்டம் உடமை உரிமைகள் பற்றியும் திருமணம் பற்றியும் விபரமான வரையறைகளைக் விபரிக்கின்றது. இலங்கையில் பொதுவான சட்டமான பொதுச் சட்டக் கோவைக்கு மேலதிகமாக உள்ள மூன்று சட்டங்களில் தேசவழமைச் சட்டமும் ஒன்று.

ஏனையவை இரண்டும் கண்டிச் சட்டம், இசுலாமியச் சட்டம் ஆகியவையாகும். கண்டிச் சட்டமானது கண்டி வாழ் பௌத்தர்களுக்கும், இசுலாமியச் சட்டமானது இலங்கை வாழ் இசுலாமியர்களுக்கும், தேசவழமைச் சட்டமானது வட மாகாணத்தில் வாழும் மக்களுக்கும் மாத்திரமே இயல்புடையதாகிறது. "தேசவழமைச் சட்டத்தின்படி கூட்டு உரிமையாளர்கள், கூட்டு முதுசகத்தார்கள், அயல்காணி உரிமையாளர்கள், வட மாகாணத்தில் தம் காணியை ஈடு வைத்துள்ளவர்கள் விலைப்படும் காணியை வாங்குவதற்கு முதல் உரிமை யாளராகின்றனர்"

## சொத்துடைமைகள்

ஒரு ஆணும், பெண்ணும் திருமணம் மூலம் இணைந்து குடும்பமாக வாழ்கின்றபோது அவர்களுக்கு வந்து சேரும் சொத்துக்களைத்தேச வழமைச் சட்டத்தின்படி சொத்துடைமைகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது.

அவை முதுசம், சீதனம், தேடிய தேட்டம் ஆகியனவாகும்.

முதுசொம் என்பது கணவர் வழிவந்த மரபுரிமைச் சொத்தாகும்.

சீதனம் என்பது மனைவியின் தாய் வழி வந்த மரபுரிமைச் சொத்தாகும்.

தேடிய தேட்டம் என்பது கணவனும் மனைவியும் தங்கள் மண வாழ்வின் போது தேடிக் கொண்ட சொத்துக்களாகும்.

ஆண் கொண்டுவரும் சொத்து முதுசொம் என்றும், பெண் கொண்டுவரும் சொத்து சீதனம் என்றும், இருவரும் குடும்பம் நடத்திவரும் போது தேடிக்கொள்ளும் சொத்து தேடியதேட்டம் என்றும் அழைக்கப்படுகின்றன. இருவருக்கும் ஆண்பிள்ளைகளும்,பெண்பிள்ளைகளும் பிறந்தால், முதுசொம் ஆண்பிள்ளைகளுக்கும், சீதனம் பெண்பிள்ளைகளுக்கும் சேரும். தேடியதேட்டத்தில் இருபாலாருக்கும் பங்கு உண்டு. இவ்விதம் பரம்பரைச் சொத்தானது கணவனுடனும் மனைவியுடனும் தனித்தனியாக பேணப்படுகிறது.

ஒரு விதவை மறுமணம் செய்யுமிடத்து அவருடைய சீதனச் சொத்தானது அவருடைய இருமண புதல்வியருக்கும் பங்கிடப்படுகின்றது. மனைவியை இழந்தவர் மறுமணம் செய்யுமிடத்து அவருடைய இறந்த மனைவியின் சீதனச் சொத்துக்களை அம்மனைவியின் பெண்பிள்ளைகளுக்கும், தனது முதுச சொத்துக்களில் பாதியை அம்மனைவியின் ஆண் பிள்ளைகளுக்கும், தேடிய தேட்டத்தில் பாதியை அம்மனைவியின் எல்லாப் பிள்ளைகளுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்தல் அவசியமாகிறது.

மணமுறிவின் போது பெண்ணுக்குச் சீதனமாக வழங்கப்பட்ட சொத்துக்களனைத்தும் பெண்ணுடன் வருவதுடன் தேடிய தேட்டத்தில் ஐம்பது சதவிகிதமும் அவருக்கு வழங்கப்பட வேண்டும். பெண்ணின் சீதனத்தில் ஆண் செலவு செய்திருப்பின் அத்தொகையும் பெண்ணுக்கு வழங்கப்படல் வேண்டும்.

திருமணமான ஒரு பெண் பிள்ளைகள் இல்லாமல் இறந்துபோனால் அவள் கொண்டுவந்த சீதனம் அவளுடைய சகோதரிகளுக்கோ, அவர்கள் இல்லாதவிடத்து அவர்களது பெண்பிள்ளைகளுக்கோ சேருமேயன்றி அவளது ஆண் சகோதரர்களுக்கோ அல்லது ஆண்வழி வாரிசுகளுக்கோ செல்வதில்லை.

இச்சலுகைகளானவை திருமண வாழ்வின்போது பெண்ணுக்கு ஒரு பாதுகாப்பாக இருந்ததுடன், சலுகைகளானவை திருமண வாழ்வின் போது பெண்ணுக்கு ஒரு பாதுகாப்பையும் அந்தஸ்தையும் பெற்றுக் கொடுத்தது. அத்துடன் அக்காலச் சமூகத்தில் விதவைக்கும் விவாகரத்தாகிய பெண்ணுக்கும் சமூக அங்கீகாரம் வழங்கும் அனுகூலமான சட்டமாக இதனைக் கருதலாம்.

1. இலங்கை தமிழர்கள் தாய்வழி மரபை பின்பற்றுபவர்கள்.
2. பெண்களே குடும்பத்தின் தலை-வர்களாக கொள்ளப்படுகின்றனர்.
3. குடும்பத்தின் சொத்துரிமை அந்த குடும்பத்தின் பெண்களுக்கே உள்ளது.

யாழ்ப்பாணத்தின் 80% சொத்துக்கள் பெண்கள் கையிலேயே உள்ளன.





நன்றி: ஈழத்துவரலாறும் தொல்லியலும்.



கருகுமணி

# இரவுச் சாப்பாடு வருகின்றது



தகைசால் பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

ஆபிரக்கக் கண்டத்திலே பல்வகை மக்கள் வாழ்கிறார்கள். மனிதரைச் சாப்பிடுபவர்களும் வழ்ந்துள்ளனர். அங்கு பெருந்தொகை மொழிகளும் பேசப்படுகின்றன. அம் மொழிகளின் பண்புகளும் அவை பேசப்படும் முறைகளும் மொழியியலாளர்களுக்கு வியப்பளிப்பானவையாகவும் உள்ளன. நாம் ‘அ’ என்று ஒலிக்கும்போது நெஞ்சிலிருந்து வரும் காற்றினை வெளியே தள்ளுகிறோம். ஆனால் ஆபிரிக்காவில் சில மொழிகளில் ‘அ’ என்பதனை ஒலிக்கும்போது காற்றினை உள்ளே இழுக்கின்றார்கள்.ஒரு தடவை ஒலித்துப் பாருங்கள்.அவ்வளவு எளிதானதல்ல என்பதை நீங்களே உணர்வீர்கள்.

முழவிலே ஒலித்துப் பேசுகின்ற மொழி வழக்கும் ஆபிரிக்காவிலே உண்டு. இத்தகைய வியப்பான பண்புகளையுடைய மொழிகளை ஆராய்வதற்காக 18ஆம், 19ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளிலே பல மொழியியல் ஆய்வாளர்கள் அங்கு சென்றனர். முன்னர் ஒரு தடவை ஓர் ஆய்வாளர் ஆபிரிக்காவில் ஓர் ஊரிலே சென்று அங்குள்ள மொழி பற்றிய ஆய்வுத் தரவுகளைப் பெற்றுக் கொண்டு அன்று இரவு அடுத்த ஊரிலே தங்கி அடுத்த நாள் மொழியாய்வு செய்வதற்காக ஒரு வழிகாட்டியுடன் மாலை நேரம் புறப்பட்டுச் சென்றாராம். அவர் ஊரைக் கடக்கின்ற வேளையிலே அவர் நின்று புறப்பட்ட ஊரிலிருந்து



முழவொலி கேட்டது. உடனே மொழியாய் வாளர் தன்னுடைய வழிகாட்டியிடம் அந்த முழவொலி பற்றிக் கேட்டார். அதற்கு அந்த வழிகாட்டி “நீங்கள் நின்ற ஊரவர்கள் நீங்கள் செல்லும் அடுத்த ஊரவர்களுக்குத் தகவல் அனுப்புகிறார்கள்” என்றான். “என்ன தகவல்அனுப்புகிறார்கள்?” என்று கேட்டார் ஆய்வாளர். “அடுத்த ஊரவர்களுக்கு, உங்களுடைய இரவுச் சாப்பாடு வருகிறது என்னும் தகவலை அனுப்புகிறார்கள்” என்றான் வழிகாட்டி. அடுத்த ஊரில் உள்ளவர்கள் மனிதரை உண்பவர்கள் என்பது மொழி ஆய்வாளருக்குத் தெரியாது.

II ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அன்பின் நிமித்தம் பிள்ளைகளுக்கு....

பெற்றோர்கள் அல்ல பிள்ளைகளே நிர்ணயிக்கிறார்களாம். இதை உணர்ந்த விற்பனையாளர்களும் விளம்பர தாரர்களும் சிறுவர்களைக் கவரக்கூடியதாகக் கார் விளம்பரங்களைச் செய்கிறார்களாம். இந்த விளம்பரங்கள் எந்த நம்பிக்கையில் செய்யப்படுகிறது தெரியுமா? பிள்ளைகளின் தொந்தரவு தாங்காமல் பெற்றோர் அந்தக் காரை வாங்குவார்கள் என்ற நம்பிக்கையில் தானாம்.

இத்தனை வசதியும் கொண்ட இளம் வாரிசுகள் சந்தோஷத்தில் மிதக்கிறார்களா? அது தான் இல்லை என்கிறார் Prof. Paula. Barrett. முந்தய தலைமுறையினருடம் ஒப்பிடும் போது இன்றய தலைமுறைச் சிறார்கள் பல மன உழைச்சலுக்கும் ஆளாகிறார்களாம். இதனால் நாம் எமது இளம் வாரிசுகளை வளர்ப்பதில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அன்பின் நிமித்தம் அவர்களுக்கு வாரி வழங்குவது அவர்களின் நன்மைக்கா? தீமைக்கா? முடிவு செய்ய வேண்டியது பெற்றோரே!

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கத்தி கொடுத்து விறகு வாங்கினேன்

எமது இளம் சந்ததியினருக்கு, புதியவற்றை பதியவைக்க ஊடகங்களும் மறைமுகமாக உதவுகின்றன. யூரிப்சனல் காட்சிப்படுத்தல் மட்டுமே பெரிதாக இருக்க அவைபற்றிய சரித்திர சான்றுகள் பற்றி மேலோட்டமாக மட்டும் சொல்லிநிற்கின்றது. சில இடத்தில் அதுவும் இருக்காது. புதியவை எவ்வளவு முக்கியமோ அதனை விட எமது தொன்மை முகவும் முக்கியம்.

கீரி மலையில் ஜனாதிபதி மாளிகை என்பது பெரும் செய்தியாக, அந்த இடத்தில் தொன்மைமிக்க சிவன் ஆலயம் இருந்தது என்பது நாளடைவில் கரைந்து போய் விடும். இந்துமதம், கிறிஸ்தவம், இஸ்லாம் எந்த மதமாக இருந்தாலும் தமிழர்களின் இருப்பை அவை ஒருவகையில் காட்டுவதாக அமையும். எனவே எந்த மதமாக இருந்தாலும் தொன்மையானவற்றையும் பாதுகாப்போம். ஒரு இனத்தின் தாரப்பரியத்தை அடியோடு நீக்கும் நோக்கோடு இலங்கை தொல்லியல் திணைக்கம் தொடர்ந்து செயற்படுவதாகவே நாம் கருதுகின்றோம். ஒரு புறம் புதியன, புதியன, என்று இலங்கையில் தமிழர்கள் இருப்பை பின்னோக்கி மறைமுகமாக நகர்த்த உதவுகின்றோமோ என்றும் நம்மை எண்ணவைப்பதும் இயல்பே. இப்படியாக பழமையை கொடுத்து புதுசுகள் வாங்கி முலத்தை இளக்கும் நாம் கத்திகொடுத்து விறகு வாங்கினேன் டும் டும் கதைபோல் தொடருமோ?

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நான் வில்லனாக இருந்த...

மனைவி வந்தா. அப்பாடா இண்டைக்கு மனுஷன் எந்தச் சாப்பாடு என்றாலும் நல்லது என்றுசாப்பிடுவார். ஆமிபிடிச்ச காணியை மயிலிட்டியில் இப்ப திருப்பி கொடுக்க,(2023)அதனை மீண்டும் பெற்ற சந்தோஷம்போல் என்ர மனுஷனும், சந்தோஷமா பழைய இடத்தில் இருக்கிறார், என மனதுக்குள் எண்ணிக்கொண்டாள்.

எனக்கு இடம் பிடித்து தந்தவர் சாப்பிட்டு முடிந்து எழும்பி போகிறார். அந்த அழகிய மனுசர்கள் இப்ப கிழடாக எனக்கு தெரியவில்லை. நாம் வாழ்வில் எமக்கு வில்லன் என நினைப்பவர்கள் பலருக்கு, நாம்தான் வில்லனாக இருந்திருக்கிறோம் என்ற உண்மை விளங்க காலக் கோடுகள்தான் தீர்ப்பு,வழங்குகின்றன. இடம் பிடிக்கிற குணம் சிறுவயதில் தொடங்கியது, இப்பதான் சிறிது சிறிதாக, மறைகிறது. தனி வாழைப்பழம் தந்த பாடமாவும் இருக்கலாம்.

விடுமுறை முடிந்து யேர்மனிக்கு, விமானத்தில் வருகின்றேன். எனக்கு முன்னால் ஒரு ஆசனமும் இல்லை.காலை நீட்டி நல்லா இருக்கலாம், எந்த நேரமும் எவரையும் எழுப்பாது எழும்பி நடக்கலாம், எவ்வளவு வசதி.

அடுத்த பயணத்திற்கும் இந்த இருக்கை எனக்கே உரியது என உறுதிமுடிக்க மனசு திட்டம் போடுகிறது.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு சாதனை இல்லத்...

வாழ என்னை ஊக்கமளித்தார். என்னை Modify பண்ணியிருக்கிறார். நான் இப்போது அழுகவில்லை. அவர் வாழும் காலத்தில் எவ்வளவு பெயரோடும் புகழோடும் வாழ்ந்தாரோ அவர் இறந்த பின்னும் அவரது பெயரும் புகழும் கெடாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் இருந்தபோது எனக்கு தமிழ் சமூகம் எவ்வளவு மரியாதை தந்ததோ இனிவரும் காலத்திலும் என்னையும் என் மகனையும் தமிழ் சமூகம் நடத்த வேண்டும் என்று பணிவுடன் கேட்கிறேன். இளம் விதவைகளுக்கு இது மிகத் தேவை! பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. இங்கு நிறைய ஆண்கள் இருக்கிறீர்கள். அவர் இருக்கும் போது தரப்பட்ட பாதுகாப்பும் மரியாதையும் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று கேட்கிறேன். அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று எல்லோரும் பிரார்த்திப்போம். முடிந்தவரை உங்கள் வீட்டிலுள்ள பெண்களை மரியாதையுடன் நடத்துங்கள். அவர் சமையலில் குறை கண்டால் (குறைகள் இருப்பது மனித இயல்பு) கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள். அப்படி நீங்கள் நடந்தால் தமது வாழ்க்கை முழுவதும் உங்களை அவர் தெய்வமாக மதிப்பார். என் கணவரை நான் ராமர் என்றோ தர்மர் என்றேதான் கருதுகிறேன். என் எஞ்சிய வாழ்வில் நான் என் கணவரையே இறைவனாக வணங்குவேன். அந்த நல்ல மனிதனைப் பெற்றெடுத்த தாய், தந்தையருக்கு நன்றி கூறுகிறேன் என்று தன் உரையை நிறைவு செய்தார் அந்த தமிழ் மங்கை.

இலங்கையில் எத்தனை ரகமான தமிழர்களை சந்தித்திருக்கிறேன். வயதில் இளைய இந்தத் தமிழ் மங்கை பிரிட்டனின் இலண்டன் நகரில் எங்கள் மத்தியில் வாழ்வது எமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.







அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



Dr.IN

# 'இனிப்பில் நாட்டம்'

**பசி இருப்பது கூடாது. பசி இருந்தால் இனிப்பு சேர்ந்த உணவுகளுக்கான அவா அதிகரிக்கும்.**

ஐஸ்கிறீம் இனிப்பு போன்ற உணவுகளுக்கு அடிமையாகினால் அதிலிருந்து விடுபடுவது எப்படி?

சொக்லேட், ஐஸ்கிறீம் இனிப்பு போன்ற உணவுகளில் ஆர்வம் அதிகம். கிட்டத்தட்ட இவற்றுக்கு நாம் அடிமையாகிவிட்டோம் என்று கூட சொல்லலாம். இதிலிருந்து எப்படி விடுபடுவது?

இனிப்பு உணவுகளிலிருந்து விடுபடுவது எப்படி என்று சொல்வதற்கு முன்னர் அதற்கு அடிமையாகிவிட்டோம் என்று எண்ணுவதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்பது பற்றி சில வார்த்தைகள் சொல்லியே ஆக வேண்டும். இனிப்புக்கு அடிமையாவது என்பது வெறும் பேச்சுச் சொல்ல அல்ல. அது ஒரு நோய் போல பலரையும் பீடித்துள்ளது.

ஏனெனில் நாம் இனிப்பை உட்கொள்ளும் போது எமது குருதியில் அபின் சார்ந்ததும் டோபமின் போன்றதுமான இரசாயனங்கள் கலக்கின்றன என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். குருதியில் அதிகளவு டோபமின் சேரும்போது எம்மையறியது ஒரு இன்ப உணர்வு ஏற்படுகிறது. அந்த உணர்வை தொடர வேண்டுமாயின் உடலானது இனிப்பை மேலும் உட்கொள்ளத் தூண்டுகிறது. நாட்செல்லச் செல்ல அதே அளவு இன்பத்தைப் பெற கூடியளவிலான இனிப்பை உட்கொள்ள நேர்கிறது. மது மற்றும் போதைப் பொருள்களும் அவ்வாறுதான் அடிமையாக்குகின்றன. இனிப்பானது கொகேயினை விட அதிகமாக ஒருவரை அடிமைப்படுத்த வல்லது என Cassie Bjork என்ற ஆய்வாளர் கூறுகிறார். அத்துடன் அதிக இனிப்பை உட்கொள்வதால் எடை ஏறுகிறது. இதன் தொடர்ச்சியாக பிரஸர், கொலஸ்டரோல், நீரிழிவு, இருதய நோய்கள் போன்றவை வரும். எனவே நீங்கள் அதிக இனிப்பிலிருந்து விடுபட வேண்டியது அவசியம்தான்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

இனிப்பு என்பது சீனி சர்க்கரை ஆகியவற்றிலும் அவை சேர்க்கப்பட்ட உணவுகளிலும் மட்டும்தான் இருக்கிறது என்றில்லை. பழங்களிலும் இருக்கிறது. பழங்களில் உள்ள இனிப்பு தனியாக வருவதில்லை. பழங்களிலுள்ள இனிப்பானது நார்ப் பொருள் மற்றும் ஏனைய போசணைப் பொருட்களுடன் கலந்து வருகிறது. இதனால் அவற்றில் சீனியின் அடர்த்தி குறைவு. எனவே அவற்றை உண்ணும் போது குருதியில் சீனியின் அளவு திடீரென ஏறுவதில்லை என்பதையும் குறிப்பிடலாம். எனவே அவற்றில் அடிமையாகும் நிலை ஏற்படுவதில்லை.

## இதிலிருந்து விடுபடுவது எப்படி?

முதல் வேலையாக உங்களது வீட்டிலிருந்து சீனியையும் சீனி சார்ந்த பொருட்களை வீசிவிடுங்கள். அலுமாரிகளிலிருந்து அகற்றுவதுடன் உங்கள் முயற்சி நின்றுவிடக் கூடாது. அவற்றை உண்பதில்லை என திடசங்கற்பம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஓவ்வொரு நேர உணவையும் சரியான நேரத்தில் போதியளவாகவும் போசாக்கு நிறைந்ததாகவும் உட்கொள்ள வேண்டும். காலை உணவிலிருந்து இதை ஆரம்பிப்பது முக்கியம். இப்பொழுது பலர் வேலை அவசரத்தில் காலை உணவை தவிர்த்து விட்டு பின்னர் பசி எடுக்கும் போது திடீர் உணவுகளை கடையில் வாங்கித் திணிக்கும் போதே இந்த பிரச்சனை ஆரம்பிக்கிறது. எனவே மாப் பொருள் புரதம் கொழுப்பு போன்ற போசணைகள் சரியான அளவில் உள்ள உணவுகளைத் தேர்ந்தெடுங்கள். ஏதாவது காய்கறி பழவகைகள் சேர்ந்திருப்பது அவசியம்.

போதிய நீர் அருந்துங்கள். தினமும் 6 கிளாஸ் நீர் அருந்துவது நல்லது. அவை இனிப்பூட்டப்பட்ட பானங்களாக இருக்கக் கூடாது. பசி இருப்பது கூடாது. பசி இருந்தால் இனிப்பு சேர்ந்த உணவுகளுக்கான அவா அதிகரிக்கும். எனவே பிரதான உணவுகளுக்கு இடைப்பட்ட வேளைகளில் சிறு உணவுகள் உட்கொள்ளலாம். ஆனால் கேக் பிஸ்கற், ரோல்ஸ், பற்றிஸ், உருளைக் கிழங்கு சிப்ஸ் போன்றவற்றை தொடவும் கூடாது. பழங்களாகவோ காய்கறிகள் அதிகம் சேர்ந்தவையாகவும் இருப்பது நல்லது.

மாறாக வறுத்த கடலை, கச்சான் எண்ணெய் சேர்க்காத கரட் வறுவல் போன்ற ஏதாவது ஒரு இனிப்பற்ற போசாக்கு சிற்றுணவை தயாராக வைத்திருங்கள். வீட்டில் இருக்கும் போது மட்டுமல்ல வேலைக்கு போகும் போதோ, வெளியே செல்லும் போதோ பசி எடுக்கும்போது இவற்றை உண்ணுங்கள். கடை நொறுக்குத் தீனிகளை சாப்பிடவே வேண்டாம்.

தினசரி ஏதாவது உடல் உழைப்பில் ஈடுபடுங்கள் அல்லது உடற் பயிற்சி செய்யுங்கள். இது உங்கள் குருதியில் சீனியின் அளவை அதிகரிக்க விடாமல் தடுப்பதால் இனிப்பு மீதான நாட்டத்தையும் குறைக்கும். அத்துடன் மனம் மகிழ்ச்சியாக இருப்பதாலும் வெற்றுப் பொழுதுகள் இல்லாததாலும் இனிப்பை நாட வேண்டிய அவசியம் ஏற்படாது.

மனஅழுத்தம் இருந்தால் அதை மறக்க பலர் மதுவை நாடுகிறார்கள். உங்களைப் போன்ற இனிப்பிற்கு அடிமையானவர்கள் இனிப்பையே நாடுவார்கள். எனவே மன அழுத்தத்தை தூண்டும் விடயங்களில் ஈடுபடாதீர்கள். உடற் பயிற்சி, நடைப் பயிற்சி, தியானம், யோகாசனம், மந்திர உச்சாடனம் போன்ற ஏதாவது செயற்பாட்டில் ஈடுபடுவதும் நன்மை தரும். அதே போல போதிய உறக்கமும் அவசியம். இக் கட்டுரையைப் படித்து முடித்துவிட்டு சும்மா இருக்காதீர்கள். உடனடியாக எழுந்து உங்கள் வீட்டிலுள்ள சொக்லேட், ஐஸ்கிறீம் முதற்கொண்டு எல்லா இனிப்புகளையும் குப்பைக் கூடையில் வீசுவதிலிருந்து உங்கள் முயற்சியை ஆரம்பியுங்கள். இனிப்பிலிருந்து விடுதலை நிச்சயம்.



அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# யேர்மனியில் தேர்க்காலம் 2023



## யேர்மனியில் ஆலயங்களின் கொடியேற்ற தேர் உற்சவங்கள் 2023

தொகுப்பு: ஆன்மிகத்தென்றல் த.புவனேந்திரன் (யேர்மனி)

**வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
Tel: 0202 479 60 17
கொடி : 12.05.2023 - தேர்: 20.05.2023
Hünefeld Str 63b
42282 Wuppertal

**யுலிச்சன் நவசக்தி விநாயகர் ஆலயம்**
Tel:02164 70 20 944
கொடி: 26.06.2023 - தேர்: 04.06.2023
Hoch str 10 b; 41363 Jüchen.

**சுட்காட் ஸ்ரீசித்திவிநாயர் கோவில்**
Tel: 0176 434 424 39
கொடி: 17.06.2023 - தேர்: 25.06.2023
Lehmfeld Str 18 70374 Suttgart

**கற்றிங்கன் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02324 27061, 01577 36 63 939
கொடி: 17.06 2023 - தேர்: 25.06.2023
Gottwald Str 23 45525 Hattingen.

**ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்**
Tel: 02388 302 223
கொடி: 05.06.2023 - தேர்: 18.06.2023
Siegenbeck Str 4-5, 59071 Hamm

**எசன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
Tel: 0201 806 74 33
அலங்கார உற்சவம்: 01.07.2023-
தேர்: 09.07.2023
Kloster Str 49 a, 45149 Essen

**டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
Tel: 0231 72515165
கொடி: 24.06.2023 - தேர்:02.07.2023
Klefer Str 24, 44225 Dortmund

**கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 02151 565 00 45
கொடி: 24.06.2023 - தேர்: 02.07.2023
Elisabeth Str 103-105. 47799 Krefeld.

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்லழகர் ஆலயம்**
Tel: 02381 291 03
கொடி: 15.07.2023 - தேர்: 23.07.2023
Roon Str 2 a; 59065 Hamm

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
Tel: 02261 5015 964, 0176 3015 2913
கொடி: 01.07.2023 - தேர்: 09.07.2023
Industrie Str 7; 51643 Gummersbach

**சுட்காட் சித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 0711 470 30 47
கொடி: 21.07.2023 தேர்: 30.07.2023
Waiblnger Str 30; 70372 Suttgart

**கிர்ஸ்கெம்ரெக் கனகதுர்க்க அம்பாள் ஆலயம்**
Tel: 07021 807 43 99
அலங்காரத் திருவிழா: 29.06.2023 -
தேர்: 06.07.2023
Alleen Str 18-20 73230 Kirchheim U. Teck.

**ஹம் சித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02381 162 686
கொடி: 29.06.2023 - தேர்:06.07.2023
Ferdinand poggel Str25, 59065 Hamm

**பேர்லின் மயூரபதி முருகன் ஆலயம்**
கொடி: 21.08.2023 - தேர்: 13.09.2023
Blaschko Alle 48; 12355 Berlin.

**கவுஸ்கொம் முல்கைம் முருகன் ஆலயம்**
Tel: 0152 537 924 93
அலங்காரத் திருவிழா: 01.09.2023 -
தேர் : 10.09.2023
Hauskam Str 58; 45476 Muelheim/Ruhr

**கனோவர் முத்துமாரி அம்பாள் ஆலயம்**
Tel: 0511 471 149, 0151 74 21 89 05.
கொடி: 14.07.2023 - தேர்: 23.07.2023
Carl- Buderus Str 3a; 30455 Hannover.

# யேர்மனியில் இடம் பெற்ற விழிப்புணர்வு தியானப் பயிற்சிகள்







கடந்த மாதம் யேர்மனியில் தமிழர் அரங்கத்தில் Dortmund சிறப்பாக விழிப்புணர்வு தியானப் பயிற்சிகள் பங்குனி 10,13,17,20 திகதிகளில் இடம் பெற்றன. இந்நிகழ்ச்சியை திரு. தவம் அவர்கள் தான் கற்றுணர்ந்த வற்றை முற்றிலும் இலவசமான சேவை! அடிப்படையில் செய்துள்ளார்.

உங்களுக்குள் உள்ள இறைத்தன்மையை உணர்ந்து கொள்ளவும், எப்படி மன அழுத்தத்திற்குள் போகாமல் இருப்பதற்கும், மன அழுத்தத்தில் இருந்து எப்படி வெளியேற்றுவதற்காகன விழிப்புணர்வு பயிற்சியும் மற்றும் திருமணத்தை எதிர்நோக்கி இருக்கும் இளையோருக்கு, அன்பு, கருணை, சத்தியம் இவைகளை முன்னிருத்தி வாழும் கலைப் பயிற்சியும் இடம் பெற்றன. பெரும் திரளாக அன்றி ஒரு சில மக்களே கலந்துகொண்டாலும் , பண்பும், பயனும், பெரிதாக இருந்தது. சிற்றுண்டியை தரையில் இருந்து உண்டு மகிழ்ந்தார்கள். காலத்திற்கு ஏற்றதொரு சேவை. வாழ்த்துக்கள்.





**வெற்றிமணி திருமண சேவை**

இந்தியா, சென்னையில் பிறந்து ஜெர்மனியை வதிவிடமாக கொண்ட 30 வயது இந்து முதலியார் இனத்தைச் சேர்ந்த எங்கள் மகளுக்கு ஜெர்மனியை வதிவிடமாக கொண்ட இந்து மதத்தைச் சேர்ந்த மணமகனை எதிர்பார்க்கிறோம்.

மணமகள் ஜெர்மனியில் BONN UNIVERSITY யில் phd முடித்து தற்போது HAMBURG UNIVERSITY யில் POST DOCTORAL RESEARCHER ஆக பணிபுரிகிறாளர்.

ஜெர்மனியில் பணிபுரியும் மணமகன், திருமணத்திற்கு பின் மணமகளுடன் ஜெர்மனியில் வசிக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

MOBIL: 0091-9841026997| Email: kbr0452@yhoo.co.in






# ரஜினி- 170 என்கவுண்ட்டருக்கு எதிரானதா?

ரஜினிகாந்த் இப்போது ஜெயிலர் மற்றும் லால் சலாம் ஆகிய படங்க ளில் நடித்து வருகிறார். இதன் பின்னர் அவர் நடிக்கும் படத்தை இயக்குநர் ஞானவேல் இயக்க உள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தபடத்தை லைகா புரொட க்ஷன்ஸ் தயாரிக்க, அனிருத் இசை யமைக்கிறார்.இந்நிலையில் இந்த படத்தின் கதைக்களம் பற்றி சமூகவ லைதளங்களில் ஒரு தகவல் பரவி வருகிறது. அதன்படி இந்த படத்தில் ரஜினிகாந்த் ஓய்வு பெற்றபொலிஸ் அதிகாரியாக நடிப்பதாகவும், அவர் சட்டத்துக்குப் புறம்பாக நடக்கும் என் கவுண்ட்டர்களுக்கு எதிராக போராடும் வேடத்தில் நடிப்பதாகவும் சொல்லப் படுகிறது.



# மஞ்சு வாரியரின் அதிக பட்ச சம்பளம்

படங்கள் வெற்றியடைந்தாலும், பெரிய நாயகர்களுக்கு ஜோடியாக தொடர்ந்து நடித்தாலும் கூட நடிகைகளின் சம் பளம் பத்து லட்சம் முதல் 20 லட்சங்கள்தான்.

ஆனால், தமிழ் சினிமாவில் நடிக்க வந்தால் அவர்களது சம்பளம் 20 லட்சத்திலிருந்துதான் ஆரம்பிக்கும். இதனால் தான் மலையாள நடிகைகள் தமிழில் நடிக்க அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

இதில் தற்போது இணைந்திருப்பவர் மலையாள சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்த மஞ்சு வாரி யர். முதலில் தனுஷுடன் 'அசுரன்' படத்தில் நடித்தார். சமீபத்தில் அஜித்துடன் ''துணிவு' படத்திலும் நடித்திருக்கி றார்.இந்தப் படத்தில் நடிப்பதற்கு மஞ்சு வாரியர் வாங்கிய சம்பளம் ஒன்றரைக் கோடி என்கிறார்கள். அதாவது மஞ்சு வாரியர் இதுவரையில் வாங்கிய சம்பளத்தில் அதிகபட்சம் 'துணிவு'க்கு வாங்கிய சம்பளம்தானாம்.

# சிம்புவின் 50 ஆவது படம்

பத்து தல படத்துக்குப் பிறகு சிம்பு அடுத்து எந்த படத்தில் நடிக்கப் போகிறார் என்ற கேள்விக்குப் பதிலாக சமீபத்தில் கமல்ஹாசன் தயாரிப்பில் தேசிங் பெரிய சாமி இயக்கும் படத்தில் சிம்பு நடிக்கவுள்ளதாக அறி விக்கப்பட்டது.

இது சிம்புவின் 48 ஆவது படம். இந்நிலையில் சிம்பு தன்னுடைய 50 ஆவது படத்தை மிகப் பிரம் மாண்டமாக எடுக்க ஆசைப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.இதற்காக ஏ ஆர் முருகதாஸ் இயக்கத்தில் ஒரு சூப்பர் ஹீரோ கதையைக் கேட் டுள்ளதாகவும், அதே போல சுதா கொங்கரா இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க உள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால் இப்போது பரவி வரும் தகவல்களின் படி சிம்பு தானே அந்த படத்தை இயக்க விரும்புவதா கவும், அந்த படம் அவரின் வெற்றிப்படமான படமான மன்மதன் படத்தின் 2 ஆம் பாகமாக இருக்கலாம் என சொல்லப்படுகிறது.



# பாடகரான ஏ.ஆர்.ரகுமானின் மகன்



கிருஷ்ணா இயக்கத்தில் சிம்பு, கௌதம் கார்த்திக், பிரியா பவானி சங்கர் ஆகியோர் நடிப்பில் உருவாகி உள்ள படம் பத்து தல.

ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ள இந்த படம் எதிர்வரும் 30ஆம் திகதி திரைக்கு வருகிறது.

இதில் நினைவிருக்கா என்று தொடங்கும் அந்த பாடலை ஏ.ஆர்.ரஹ்மானின் மகன் அமீன் பின்னணி பாடியிருக்கிறார்.









அனைவருக்கும் தமிழ் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
15.03.2023 முதல்
15.04.2023 வரை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை!
சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம்
அனைத்து ஆடைகளும் 2023ம் ஆண்டின்
புத்தம் புது வரவுகள்
உங்கள் வரவுகளும் மகிழ்ச்சியாக அமையட்டும்.
சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
SALE
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
Stuttgart நகரில்...
சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
யேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de


Photography
Cinematography
Album Making
Graphic Designing
akr
VISUALIZERS
Photography
சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
AKRVISUALIZERS
+ 49 162 803 1647
akrvisualizers
akrvisualizer@gmail.com
Asselner Hellweg 118 44319 Dortmund


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698
சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்